# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு | குரல் 4. | ஆகஸ்ட் 84 | அன்பளிப்பு ரூ 2


# இராணுவ பயங்கரவாதத்தை எதிர்த்து விடுதலைப்புலிகள் வீரப்போர்

**சிங்கள இனவாத இராணுவம் இம்முறை வடக்கில் கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாத வெறியாட்டத்தை எதிர்த்து எமது கெரில்லா அணிகள் பல முனைகளில் ஆயுதப் படைகளுடன் நேரடியாக மோதி எதிரிக்கு பலத்த உயிர்ச் சேதத்தை விளைவித்தனர். வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய முனைகளில் விடுதலைப்புலி வீரர்கள் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் 47 சிங்களக் கூலிப் படையினர் கொல்லப்பட்டதுடன் 50 பேர்வரை படுகாயமடைந்தனர். பல்முனைகளில் பலத்த பதிலடிகள் வாங்கி பதட்டமடைந்த சிங்கள இராணுவத்தினர் வழமை போல தமது ஆவேசத்தை வெகுசனம் மீது கட்டவிழ்த்து விட்டு தாம் ஒரு கட்டுப்பாடற்ற காடையர் கூட்டம் என்பதை உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளனர்.**

நிராயுதபாணிகளான அப்பாவித்தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனம் புரிந்துவிட்டு தண்டனை பெறாமல் தப்பிவிட முடியாது என்பதனை சிங்கள ஆயுதப் படைகளுக்கு எமது விடுதலை வீரர்கள் நன்கு உணர்த்தியுள்ளனர். நாம் ஓரிடத்தில் மட்டும் எதிரியைத் தாக்கி விட்டு ஒளிந்துகொள்ளவில்லை. பலமுனைகளில் எதிரியை எதிர்கொண்டு சமரிட்டிருக்கிறோம். எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் எதிரியைத் தாக்கிக் கதிகலங்கச் செய்யும் இராணுவ பலம் எமக்குப் பெருகி வருகிறது என்பதைச் சிங்கள அரசு இப்போது உணர்ந்து வருகிறது. அநியாயமாக எமது மக்களைக் கொன்று குவிக்கும் இந்த இனவெறி கொண்ட இராணுவத்தை பூண்டோடு அழிக்கும்வரை எமது ஆயுதப் போராட்டம் ஓய்ந்துவிடப் போவதில்லை.

ஒடுக்கப்படும் மக்களின் தேசிய சுதந்திரப் போரை பயங்கரவாதம் எனப் பறைசாற்றிக் கொண்டு, கெரில்லாப் போர் முறைக்கு ஈடு கொடுக்க முடியாது, வெகுசனம் மீது பழி தீர்த்துக்கொள்ளும் சிங்கள அரசின் போர் முறைத் திட்டமானது அப்பட்டமான இனக் கொலையை இலக்காகக் கொண்டது என்பதனை இன்றைய நாகரிக உலகம் நன்கு உணர்ந்துவிட்டது. அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்துவிட்டு, 'பயங்கரவாதிகளை' அழித்துவிட்டோம் என அத்துலத்முதலி அவிழ்த்துவிடும் அபாண்டமான பொய்களை உலக சமுதாயம் இன்று நம்பப் போவதில்லை. மனித குலத்தால் ஒதுக்கப்பட்ட சர்வதேச நாசகாரச் சக்திகளின் உதவியுடன் ஈழத் தமிழினத்தை படிப்படியாக ஒழித்துக்கட்டும் சிங்கள அரசின் இனப் படுகொலைகளை இனிப் பொறுத்துக்கொள்ளப் போவதில்லை என பாரத நாடும் பயமுறுத்தியிருக்கிறது. உலக சமூகத்தால் அந்நியமாக்கப்பட்டு ஆட்டம்காணும் சிங்கள இனவாத அரசு நீண்ட காலம் நிலைத்து நிற்கப் போவதில்லை. ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து தீவிரமாக்கி, ஜெயவர்த்தனா அரசுக்கு குழிபறிப்பது எமது விடுதலை இயக்கமாக இருக்குமென்பதை நாம் உறுதியாக உலகிற்கு எடுத்துக் கூற விரும்புகிறோம்.

விடுதலைப் புலி இயக்கத்தின் சமீபத்திய இராணுவ வெற்றிகளை மூடி மறைத்து, எமது போராளிகள் பலர் கொல்லப்பட்டதாக சிங்கள அரசு விசமத்தனமான பொய்ப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து வருகிறது. ஆனால் உண்மையில் நடந்ததென்ன? சிங்கள ஆயுதப் படைகள் பல இடங்களில், பலத்த பதிலடிகள் வாங்கி, என்றுமில்லாதபடி பெரிய உயிர்ச் சேதத்தை அடைய நேரிட்டது. எமது இராணுவ நடவடிக்கைகளின் விவரத்தைக் கீழே தருகிறோம்:

**கடற்படையினர் மீது தாக்குதல் ஆகஸ்டு 4ம் திகதி சனிக்கிழமை**

வல்வெட்டித்துறைக் கண்மையில் உள்ள பொலிகண்டி என்ற கிராமத்தில் விடுதலைப் புலிகளின் மோட்டார் படகு கடற்கரையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஸ்ரீலங்காவின் வட கரையோரத்தில் கண்காணிப்பு வலயத்தில் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த சிங்களக் கடற்படையினர் இந்த மோட்டார்ப் படகினைத் திடீரெனச் சுற்றி வளைத்தனர். பதினெட்டுப் பேரைக் கொண்ட ஸ்ரீலங்கா கடல் ரோந்துப் படையினரின் கைகளில் எதிர்பாராத நிலையில் எமது கெரில்லா வீரர்கள் நான்கு பேர் சிக்கிக்கொள்ள நேர்ந்தது. இந்நிலையில் தற்பாதுகாப்புக் கருதி எமது வீரர்கள், பதினெட்டு பேர் கொண்ட அந்தக் கடற்படைக் கோஷ்டியினர் மீது தாக்குதல் மேற்கொள்ள வேண்டியிருந்தது. கடற்படையினர் எமது கெரில்லா வீரர்களை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். சம்பவம் நடைபெற்ற இடத்தில் எமது வீரர்கள் நான்கு பேரே நின்றனராயினும் நீண்ட பயிற்சியும், சாகும் வரை போராடும் துணிவும் கொண்டவர்களாக அவர்கள் இருந்தமையால் இத் துணிகரத் தாக்குதலில் கடற்படைக் கூலிகளை அவர்கள் வெற்றிகரமாகத் தோற்கடிக்க முடிந்தது. இத்தாக்குதல் சம்பவத்தில் ஸ்ரீலங்காக் கடற்படையினர். ஆறு பேர் அந்த இடத்திலேயே சுடப்பட்டு மரணமானார்கள். மூன்று பேர் படுகாயமடைந்தனர். மிகுதிக் கடற்படையினர் பீதியில் தமது நவீன ரோந்துப் படகினையும் விட்டு விட்டு ஓடிவிட்டனர்.

சில மாதங்களுக்கு முன் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த படகினைச் சுற்றி வளைத்து படகிலிருந்த பதினைறு தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொன்று இந்தக் கடற்படையினர் நடத்திய வெறியாட்டத்தை நாம் என்றும் நினைவில் வைத்திருக்கிறோம். ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு எதிரான எமது நீடித்த கெரில்லா யுத்த நடவடிக்கைகளில் கடற்படையினருக்கு எதிரான வெற்றிகரமாகத் தொடுக்கப்பட்ட முதல் பெரிய கெரில்லாத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

வல்வையில் விடுதலைப்புலிகள் இராணுவ வாகனத்தின் மீது கெரில்லாத்தாக்குதல் நடத்திய இடம் அம்புக்குறியால் காட்டப்பட்டிருக்கிறது.

**இராணுவப் படை மீது தாக்குதல் ஆகஸ்டு 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை**

முதல் நாள் நடைபெற்ற ஸ்ரீலங்கா சிங்களக் கடற்படையினருக்கு எதிரான எமது தாக்குதலையடுத்து சிங்கள இராணுவப் படைகள் அப்பாவித் தமிழ் மக்கள் மீது தமது இராணுவ வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் வீதிகளிலே சுடப்பட்டனர். வீடுகளுக்கும் உடைமைகளுக்கும் பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது. அப்பாவி மக்கள் மீது சிங்கள இராணுவப் படையினர் நடத்திய இந்த நாசகாரச் செயலுக்கு நாமும் பதிலடி கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

இத்தகைய இராணுவக்கவச வண்டி ஒன்று தான் விடுதலைப்புலிகளால் குண்டு வீசித் தகர்க்கப்பட்டது.

வல்வெட்டித்துறைக்கு அருகில் நெடியகாடு என்ற இடத்தில் மூன்று கவசவண்டிகள், ஒரு ட்ரக், ஒரு ஜீப் சகிதம் வெறியாட்டம் நடத்திய சிங்களப் படையினர் பிரதான பாதையில் நிலக்கண்ணி வைத்து எமது வீரர்கள் நடத்திய அதிரடித் தாக்குதலில் நிலைகுலைந்து போனார்கள். ஒரு ஜீப் வண்டி தூள் தூளாகச் சிதறியதுடன் அந்த ஜீப்பில் சென்று கொண்டிருந்த ஒன்பது கமாண்டோக்களும் அந்த இடத்திலேயே மரணமடைந்தனர். இந்தத் திடீர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட உதவி பொலிஸ் அதிபரான ஜயரட்ன என்பவன் மோசமான இன வெறியனும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தீவைப்பு போன்ற நாசகாரச் செயல்களுக்குப் பொறுப்பாக இருந்தவனுமாவான்.

**பொலிஸ் நிலையத் தாக்குதல்**

ஆகஸ்ட் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில் யாழ்குடா நாட்டிற்கு வெளியே முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டிசுட்டான் என்ற பொலிஸ் நிலையத்தின் மீது எமது வீரர்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர். பயிற்றப்பட்ட எமது வீரர்களுக்குப் போதுமான ஆயுதங்கள் இல்லாத நிலையில் எதிரிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறித்தெடுக்க வேண்டிய நிலையில் நாம் திட்டமிட்டு மேற்கொண்ட கெரில்லா நடவடிக்கை இதுவாகும்.

50 பேரைக் கொண்ட இந்த பொலிஸ் நிலையத்தில் 30 பேர் கெரில்லாத் தாக்குதலுக்கு எதிரான நவீன உத்தி முறைகளில் பயிற்றப்பட்ட பொலிஸ் கமாண்டோக்கள் ஆவர். இலங்கையில் நடைபெற்ற பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதல்களில் இதுவே உக்கிரமான மிகப்பெரிய தாக்குதலாகும்.

மாடிக்கட்டடத்துடன் அமைந்திருந்த இந்தப் பொலிஸ் நிலையத்





புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com

Liberation Tigers Of
TAMIL EELAM

# புலிகளின் குரல்

ஈழத் தமிழர் பிரச்னை ஒரு தேசிய முரண்பாடாக முதிர்வதுடன் தென் ஆசியப் பிராந்தியத்தின் ஒரு சிக்கலான நெருக்கடியாகவும் மாறி வருகிறது. இதுவரை காலமும் இந்திய வல்லரசின் பூகோள—அரசியல் ஆதிபத்திய வியூகத்திற்குள் இருந்துவந்த இலங்கைத் தீவு படிப்படியாக உலக ஏகாதிபத்திய மேலாண்மைக்கும் விரிவாக்கத்திற்கும் அடிமைப்பட்டு வருகிறது. இதன் நேரடி விளைவாக இந்திய உப-கண்டத்தின் ஒழுங்கமைதி சீர்குலையும் ஆபத்து ஏற்பட்டிருப்பதுடன், இந்துமா சமுத்திரம் யுத்த நெருக்கடிப் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது.

அந்நிய காலனியத்திலிருந்து 'விடுதலை' பெற்றதிலிருந்து இந்திய — இலங்கை ராஜதந்திர அரசியல் உறவுகள் சுமுகமானதாக, நேசபூர்வமானதாக இருந்து வந்தன. தென் ஆசிய வல்லரசு என்ற ரீதியிலும் பெரியதொரு அயல்நாடு என்ற ரீதியிலும் பாரத நாடு இலங்கைத் தீவின் பாதுகாவலர் என்ற பங்கை வகித்து வந்தது. இலங்கையில் அரசியல் பூகம்பங்கள் வெடித்து, அரசின் ஸ்திர நிலைக்கு ஆபத்து ஏற்படும்பொழுதெல்லாம் இந்திய நாடு குறுக்கிட்டு இலங்கைக்கு கைகொடுத்து உதவியிருக்கிறது. உதாரணமாக, எழுபத்தொன்றில் சிங்கள இளைஞரின் ஆயுதக் கிளர்ச்சி தென் இலங்கையில் பரவி, அரசு ஆட்டம் கண்டபொழுது இலங்கைக்கு முண்டுகொடுத்து கிளர்ச்சியை நசுக்க உதவிய முதன்மையான நாடு இந்தியாவாகும். இலங்கையின் தேசிய நெருக்கடிகளைத் தீர்த்து வைப்பதில் இந்தியா நீண்ட காலமாகவே அக்கறை காட்டி வந்திருக்கிறது. இந்தியாவின் ஆதிக்க எல்லைக்குள், ஒரு சிநேகபூர்வமான, ஸ்திரமான அரசு இலங்கையில் ஆட்சி புரிவது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு நலன்களுக்கு சாதகமானது என்பதால், இந்த இலக்கைப் பேணும் அடிப்படையில் இலங்கை — இந்திய ராஜதந்திர உறவுகள் அமையப்பெற்றிருந்தன.

ஆனால் அண்மைக் காலத்தில், அதுவும் ஜெயவர்த்தன அரசு ஆட்சிபீடம் ஏறிய காலத்திலிருந்து இலங்கை — இந்திய உறவுகளில் முரண்பாடுகள் எழுந்தன. சிங்களப் பேரினவாதம் தமிழர் வெறுப்புணர்வாகவும் இந்திய எதிர்ப்புணர்வாகவும் வெளிப்பாடு கண்டதால் ராஜதந்திர உறவுகளில் சிக்கல் ஏற்படத் தொடங்கியது. ஈழத் தமிழர் தேசியப் பிரச்னையை 'பயங்கரவாதம்' எனப் பொய்யாக உருவகப்படுத்திய ஜெயவர்த்தன அரசு, 'பயங்கரவாத ஒழிப்பு' என்ற போர்வையில் இன ஒழிப்புத் திட்டத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. சிங்கள அரச பயங்கரவாதம் தமிழின சங்காரமாக கோரத்தாண்டவமாடியபொழுது தமிழ் நாட்டில் அரசியல் கொந்தளிப்பு நிலை தூக்கியது. தமிழ் நாட்டில் பிரவாகமெடுத்த அரசியல் சூறாவளியை சமாளிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட இந்திய மத்திய அரசு இலங்கைப் பிரச்னையில் ராஜதந்திர ரீதியாகத் தலையிட்டது. ஆனால் இம்முறையோ இந்திய நல்லெண்ண மத்தியஸ்துவத்தை சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் விரும்பவில்லை. இந்த ராஜதந்திர மத்தியஸ்துவத்தை இந்திய மேலாதிக்க தலையீடாகவே சிங்கள அரசு கருதியது. சிங்கள இனவாத ஆட்சியாளரின் இந்த இந்திய விரோத நிலைப்பாடு இலங்கையை உலக ஏகாதிபத்தியத்தின் சிலந்திவலைக்குள் சிக்குப்படச் செய்தது. இந்துமா சமுத்திரப் பிரதேசத்தில் இந்தியாவின் மேலாதிக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்பதும் கடலாதிக்க கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவில் தளம் அமைத்துக்கொள்வதும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் நோக்கம் என்பதால் புதிதாகப் பிறந்துள்ள இந்தச் சூழ்நிலையை இவ்வல்லரசுகள் தமக்குச் சாதகமான முறையில் பயன்படுத்தத் தவறவில்லை. இந்தியாவை நேரடியாகப் பகைத்துக்கொள்ள விரும்பாத அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் தமது அடிவருடி நாடுகள் (இஸ்ரேல், தென்னாபிரிக்கா) வாயிலாகவும் தமது நாசகார ஏஜன்சிகள் (சி.ஐ.ஏ., மொசாட், எஸ்.ஏ.எஸ்) மூலமாகவும் இலங்கைக்கு கைகொடுத்து உதவ முன் வந்தன. இந்திய விரோத அணியிலுள்ள சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் இந்தக் கூட்டில் சேர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஒட்டு மொத்தத்தில் பார்க்கப் போனால் இலங்கை அரசானது இந்தியாவின் பாதுகாப்பு வலயத்திலிருந்து நழுவி உலக ஏகாதிபத்திய விரிவாக்க சதித் திட்டத்திற்கு பலியாகியுள்ளது என்றே சொல்ல வேண்டும். ஈழத் தமிழர் பிரச்னையில் நியாயமான, நேர்மையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்காது இராணுவ சர்வாதிகார அடக்குமுறை மூலம் அத் தேசிய இனத்தை நிர்மூலமாக்க வேண்டுமென்ற பாசிசப் போக்கானது இலங்கையை இந்த ஆபத்தான பாதையில் தள்ளி விட்டிருக்கிறது. இதனால் இலங்கை — இந்திய உறவுகள் ஸ்திரமற்ற சிக்கலான பரிமாணத்தை அடைந்துள்ளன. இந்நிலையில் இந்தியா கடைப்பிடிக்க வேண்டிய நிலைப்பாடு என்ன என்ற கேள்வி எழுகிறது.

இந்திய வெளிவிவகார உறவுகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களையே பிரதானமாகக் கொண்டவை. இந்துமா சமுத்திரப் பிரதேசத்தில் உலக வல்லரசுகளின் ஊடுருவல்களைத் தடுத்து, அப்பிராந்தியத்தை அணுவாயுத யுத்த அபாயமற்ற சமாதான அரங்காக வைத்துக்கொள்வது இந்தியாவின் அடிப்படையான வெளிநாட்டுக் கொள்கையாகும். இந்த ரீதியில் இலங்கையின் சம்பந்திய உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் இந்தியாவின் தேசிய நலன்களுக்கு முரணானதாகவும், ஆபத்தானதாகவும் அமைந்து வருவது வெளிப்படை. எனவே, இலங்கை சம்பந்தப்பட்ட மட்டில் இந்தியா காலங்காலமாக கடைப்பிடித்து வந்த தனது ராஜதந்திர அரசியல் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டிய சூழ்நிலை பிறந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். இந்திய உபகண்டத்தின் சமாதான, ஸ்திர நிலைகளுக்குப் பேராபத்தை விளைவிக்கும் ஜெயவர்த்தன அரசின் பொறுப்பற்ற போக்கை இந்தியா அசட்டை செய்துவிட முடியாது.

இலங்கை — இந்திய உறவுகளின் சிக்கலுக்கு ஈழத் தமிழர் பிரச்னை மையமாக இருப்பதாலும், இந்தேசிய இனப் பிரச்னையை 'பயங்கரவாதம்' எனப் பூச்சாண்டி காட்டி ஒரு மக்கள் சமுதாயத்தைப் பூண்டோடு அழிக்க இலங்கை அரசு முனைவதாலும் இந்திய அரசானது தமிழர் பிரச்னையில் ஒரு தீர்க்கமான, தெளிவான, கண்டிப்பான நிலையைக் கடைப்பிடிப்பது அவசியமென நாம் கருதுகிறோம். ஈழத் தமிழர் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில், அம்மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். தேசிய சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்தும் எமது போராட்டம் நியாயமானது என இந்திய மக்கள் அங்கீகரிக்கும் பட்சத்தில்தான் இலங்கை அரசின் இன ஒழிப்புக் கொள்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம். இந்தியாவைப் பின்பற்றி மூன்றாவது உலகமும் எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளுமாயின் இலங்கை அரசானது தமிழர் பிரச்னையின் அரசியல் அடிப்படையை உணர்ந்து கொள்ள நிர்ப்பந்திக்கப்படும்.

தை எமது கெரில்லா வீரர்கள் மின்னலெனச் சுற்றி வளைத்துத் தாக்கினர். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பொலிஸ் நிலையத்தின் மையமான இடங்களில்— பொலிஸ் நிலையத்தின் முன்புறமாயும் பின்புறமாயும் பாய்ந்து சென்று தங்களை நிலைப்படுத்திக் கொண்டு விட்ட எமது வீரர்களின் அதிரடித் தாக்குதலில் சிங்கள வெறியனான கனேமுல்ல என்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட ஆறு பொலிஸ் கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். எந்திரத் துப்பாக்கிகள் சகிதம் எமது வீரர்கள் நடத்திய தாக்குதலுக்கு முன் நிற்கமாட்டாமல் மற்ற சிங்களக் கூலிகள் பொலிஸ் நிலையத்தை விட்டு ஓடிவிட்டனர். ஐம்பது நிமிடங்கள் அந்த பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் விழுந்தது. தமிழ்த் தீவிரவாதிகளை அடக்குவதற்கென்றே அங்கு வைக்கப்பட்டிருந்த எந்திரத் துப்பாக்கிகள், ரிவால்வர்கள், ரைபிள்கள், ரிப்பீட்டர் துப்பாக்கிகள் ஆகிய பெருந்தொகையான ஆயுதங்களையும் ரவைகளையும் எமது வீரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் விடுதலைப் புலிகள் அந்த பொலிஸ் நிலையத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குடிபெயர்ந்து வாழுகின்ற இந்திய வம்சாவழித் தமிழர்களை மிரட்டி அங்கு சொல்லொணாக் கொடுமைகள் புரிந்த இன்ஸ்பெக்டர் கனேமுல்ல என்பவன் இத்தாக்குதலில் கொல்லப்பட்டது குறிப்பிடத் தக்கது.

இந்த அதிரடித் தாக்குதலில் எமது கெரில்லா வீரர்கள் காயமுற்றனராயினும் எந்த வீரருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை.

## இராணுவக் கவச வண்டி சிதைக்கப்பட்டது

அதே தினத்தன்று யாழ்ப்பாண பிரதான ஆஸ்பத்திரிக்கு அண்மையில் கவசவண்டியை வைத்து கட்டிடங்களைச் சுட்டு சேதப்படுத்திக் கொண்டிருந்த சிங்கள படை வீரர்களுக்கு எதிராக எமது கெரில்லா வீரர்கள் செயற்பட்டனர். யாழ் நகரின் முக்கிய சந்தியில் கைக்குண்டுகளை வீசி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இராணுவக் கவசவண்டி முழுமையாக சிதைக்கப்பட்டதுடன் ஓர் இராணுவ அதிகாரி அந்த இடத்திலேயே மரணமானார். மற்றும் இரண்டு இராணுவக் கூலிப் படையினர் படுகாயமுற்றனர்.

அதே தினத்தன்று வல்வெட்டித்துறையில் கெருடாவில் என்ற கிராமத்தில் எமது கெரில்லா வீரர் ஒருவர் இராணுவப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டார். தனி ஒருவராக நின்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஓர் இராணுவக் கூலி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன் மற்ற இரண்டு இராணுவக் கூலிகளும் காயத்துடன் தப்பி ஓடிவிட்டனர்.

## மன்னாரில் இராணுவப் படை மீது தாக்குதல் ஆகஸ்டு 11-ம் திகதி சனிக்கிழமை

மன்னாரில் அமைந்துள்ள தள்ளாடி இராணுவ முகாம் தமிழ் இளைஞர்களைச் சித்திரவதை செய்வதில் பேர் பெற்ற முகாமாகும். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்க் கிராமங்களிலிருந்து தள்ளாடி இராணுவ முகாமுக்கு கொண்டு வரப்படுகிற தமிழ் இளைஞர்களைப் பற்றிய தகவல்கள் வெளித்தெரிய வருவதேயில்லை. மிகவும் பீதி தங்கிய இந்தத் தமிழ்க்கிராமங்களிலிருந்து கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் சட்டத்தரணிகளை அணுகவோ, பெற்றோரைச் சந்திக்கவோ அனுமதிக்கப்படாத நிலையில் உள்ளே அனுபவிக்கும் சித்திரவதைகள் சொல்லில் அடங்காதவை.

இந்த இனவெறி பிடித்த இராணுவமுகாமைச் சேர்ந்த படையினர் மீது எமது கெரில்லா வீரர்கள் நடத்திய வெற்றிகரமான தாக்குதல் எமது ஆயுதப் போராட்டத்தின் புதியபரிமாணத்தைக் காட்டுகிறது.

மன்னார்—பூநகரி பிரதான பாதையில் நிலக்கண்ணி சகிதம் எமது அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில், நிலக்கண்ணி வெடித்து அதில் சென்று கொண்டிருந்த 13 வீரர்கள் அந்த இடத்திலேயே மரணமானார்கள். அவர்கள் பயணம் செய்த இராணுவஜீப் ஆகாயத்தில் 30 அடி உயரம் வரை சிதறுண்ட நிலையில் தூக்கி எறியப்பட்டது.

## வல்வை பொலிஸ் நிலையத் தாக்குதல் ஆகஸ்டு 14ம் திகதி செவ்வாய்க்கிழமை

பொலிஸ் கமாண்டோக்கள், இராணுவப் படையினர் ஆகியோரை உள்ளடக்கிய வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தின் மீது அதிகாலை 4-30 மணியளவில் எமது கெரில்லா வீரர்கள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்புக்காகப் பொருத்தப்பட்டிருந்த செக்யூரிட்டி லைட் சுட்டு நொறுக்கப்பட்டு, பொலிஸ் நிலையத்தின் மூன்று புறங்களிலிருந்தும் கைக்குண்டுகள் சகிதம் தாக்குதல் நடைபெற்றது. சுமார் ஒரு மணி நேரம் பொலிஸ் நிலையத்தின் அரச கூலிப் படையினருக்கு எதிராக விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் போரில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் பல அரச படைக் கூலிகள் படுகாயமுற்றனர். எமது வீரர்கள் ஒரு மணி நேரத்திற்குப்பின் தமது தரப்பில் எந்தவிதச் சேதமும் இல்லாத நிலையில் தாக்குதலை நிறுத்திக் கொண்டனர்.

## கோபுரக்கவசவண்டி நாசம்

கரவெட்டி மேற்கில் கல்லுவம் மண்டான் பாதையில் இராணுவ வாகனங்களை நாசம் செய்வதற்காக விடுதலைப்புலிகள் நிலக்கண்ணிகளைப் புதைத்து வைத்துள்ளனர் என்று துரோகிகள் அரச படைகளுக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆகஸ்ட் 24-ம் திகதி பகல் 12-30 மணியளவில் கோபுரக்கவச வண்டி சகிதம் ஸ்ரீலங்கா இராணுவப்படையினர் வெடிகுண்டுகள் புதைக்கப்பட்டிருந்த இடத்திற்கே வந்து பாதையைத் துருவி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். ஆயினும் நிதானமாகக் காத்திருந்த விடுதலைப்புலிகள் துல்லியமாகக் கணக்கிட்டு கோபுரக்கவச வண்டி குறிக்கப்பட்ட இடத்தை வந்தடையும் தறுவாயில் குண்டுகளை வெடிக்கச்செய்து கோபுரக் கவச வண்டியைப் பூரணமாக நாசம் செய்தனர். கோபுரக்கவச வண்டி குப்புறக் கவிழ்ந்து பூரணமாகப் பற்றி எரிந்தது. இத்தாக்குதலில் 8 இராணுவப்படையினர் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

## நீர்வேலியில் தாக்குதல்

ஆகஸ்ட் 24ம் திகதி நீர்வேலியில் பிரதான பாதையில் நிலக்கண்ணிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என்று தகவல் கிடைத்ததையடுத்து இராணுவப்படை தேடுதல் நடத்தியது. தங்கள் வாகனத்தைப் பின்னால் மெதுவாக நகர்த்திக் கொண்டு முன்னால் இராணுவப்படையினர் நிலக்கண்ணிகளைத் துருவித் தேடிக்கொண்டிருந்தனர். சரியான தருணத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கப் பண்ணி 3 இராணுவப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

# மன்னாரில் இராணுவ வெறியாட்டம்



சிங்கள வெறிபிடித்த இராணுவ பொலிஸ் கூலிப் படையினர் ஆகஸ்டு 11, 12, 13 ஆகிய திகதிகளில் மன்னாரில் வெறியாட்டம் நடத்தினர்.

மன்னாரின் முக்கிய மதுபானக் கடைகளை உடைத்து, நிறையக் குடித்துவிட்டு இன வெறியுடன் மதுவெறியும் சேர சிங்கள இராணுவக் கூலிகள் மன்னாரில் உள்ள சகல கடைகளுக்கும் தீ மூட்டினர். இராணுவ ஜீப் வாகனங்களிலும் அரசுக்குச் சொந்தமான இ. போ. ச. வண்டிகளிலும் மன்னார் நகருக்கு வந்து குவிந்த இராணுவக் கூலிகள் முழு நகரையுமே தீக்கிரையாக்கினர். இரண்டு, மூன்று அரசாங்கக் கட்டிடங்களே இப்போது எஞ்சி நிற்கின்றன. 75 வீதத்திற்கும் அதிகமான முஸ்லிம் சகோதரர்களின் கடைகள் முற்றாக எரிந்து சாம்பராயின. வல்வெட்டித்துறையை விட மன்னார் மோசமாகச் சீர்குலைக்கப்பட்டிருக்கிறது. மூவாயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்து நிற்கிறார்கள். பெருமளவில் கடைகளிலும் வீடுகளிலும் புகுந்த அரச படைக் கூலிகள் உடைமைகளைச் சூறையாடினர். 12ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மட்டும் வீதிகளில் நின்ற 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் மீண்டும் மன்னாரைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதானால் இன்னும் பத்தாண்டு காலமாவது எடுக்கும்.

மன்னார் நகரை எரியூட்டியது டன் மட்டும் திருப்தியுறாத சிங்கள அரசபடைக்கூலிகள் மாந்தை, அடம்பன் கிராமங்களுக்குள்ளும் புகுந்து தங்களின் அழிவு வேலைகளைத் தொடக்கினர். இந்தக் கிராமங்கள் பூரணமாக நாசமாக்கப்பட்டுள்ளன.

சர்வ தேசப் பயங்கரவாதிகளான மொசாத் கும்பலை வரவழைத்ததன் மூலம் முழு அரபுலகையும் பகைத்துக் கொண்டு விட்ட ஸ்ரீலங்கா அரசு முஸ்லிம் சகோதரர்கள் செறிந்து வாழும் மன்னாரில் நடத்திய நாசகார வெறியாட்டத்தை மூடி மறைக்க முயற்சிக்கிறது.

சிங்கள வெறி கொண்ட அரச படைக்கூலிகள் மன்னாரில் நடத்திய சீரழிவுகளை மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஸ்ரீலங்கா போக்குவரத்துத்துறை அமைச்சர் எம். எச் முஹம்மட் மன்னாருக்கு அனுப்பிவைக்கப் பட்டார்.

மன்னாருக்கு விசாரணை மேற்கொள்ளச் சென்ற அமைச்சர் முஹம்மட்டை சூழ்ந்து வளைத்துக் கொண்டு ஆத்திரங்கொண்ட முஸ்லிம் மக்கள் இராணுவ அட்டூழியங்களுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். "பயங்கரவாதிகள் இராணுவத்தைத் தாக்கியதால் தான் இந்த மாதிரி அழிவுகள் நடந்துவிட்டன" என்று அமைச்சர் ஒரு கட்டத்தில் சொன்னபோது கோபங்கொண்ட மக்கள் "அப்படியானால் பயங்கரவாதிகளைத்தான் தாக்கலாமே தவிர இப்படி எங்களுடைய கடைகளை எரிக்கலாமா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்கள்.

மன்னாரில் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளுக்கு உரிய நஷ்ட ஈடுகள் வழங்கப்படும் என்றும் இந்த அழிவுகளுக்குப் பொறுப்பான அரசபடையினருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அற்பமான நஷ்ட ஈட்டுத் தொகையை வீசி எறிந்து விடுவதன் மூலம் முஸ்லிம் சகோதரர்களின் ஆவேசத்தீயை அணைத்து விடலாமென்று அரசு தப்புக் கணக்குப் போட்டிருக்கிறது. அரசின் இந்த நயவஞ்சகத் திட்டம் ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை.

www.eelamview.com

# ஈழத்தில் இனப்படுகொலை

''பயங்கரவாத ஒழிப்பு'' என்ற போர்வையில் பாசிஸ வெறியர்கள் ஜே. ஆர். ஜயவர்த்தனவும், லலித் அத்துலத் முதலியும் தேசிய விடுதலைக்காகப் போராடும் தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான இனப்படுகொலைத் திட்டத்தைத் துரிதப் படுத்தியுள்ளனர்.

இந்த இனப்படுகொலையைக் கொண்டு நடத்த ஸ்ரீலங்கா அரசு கொண்டுள்ள சர்வதேச உறவுகளும் 'பெருந்துணை புரிகின்றன. லத்தீன் அமெரிக்காவிலும் பிற மூன்றும் உலக நாடுகளிலும் நர வேட்டையாடி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும், மத்திய கிழக்கை மயானபூமியாக்கி வரும் சியோனிஸத்துடனும், நிற வெறி பிடித்த தென் ஆப்பிரிக்க அரசுடனும் ஸ்ரீலங்கா கை கோர்த்து நிற்கிறது. மொசாத் போன்ற நாசகாரக்கும்பலின் தயவை நாடி நிற்கிறது. உலகின் மோசமான கூலிப்படைக் கம்பெனிகளிடம் தங்களின் இராணுவத்தினருக்குப் பயிற்சி வழங்கிக் கொண்டிருக்கிறது.

பேரளவில் படுகொலைகள் புரிவதற்குத் துணையான நவீன கருவிகள் குவிக்கப்பட்டு வருகின்றன. எளிமையான ஒரு மீன்பிடிக் கிராமத்தின் மீது சிங்களப்படைகள் பீரங்கிகள் வைத்துத் தாக்குதலை நடத்துகிறது. ஆழ்கடலில் செல்லும் படகினை அப்படியே சுட்டுத்தள்ளி அமிழ்த்தி விட சிங்கள அரசு தயங்குவதில்லை. வீதியில் வரும் ஒரு டெலிகா வானை நிறுத்தி அவ்வளவு பேரையும் சுட்டுவிட்டு அவர்கள் ''பயங்கரவாதிகள்'' என்று பிரகடனப் படுத்த அரசு துளியும் வெட்கப் பட்டதில்லை.

பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட அரசயந்திரம் முழுவதும் எந்த நிமிடத்திலும் ஸ்ரீலங்காவில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழர்களைத் தனது சொந்த பிரஜைகள் என்று சொல்லிக் கொள்ளும் அரசு அதே மக்கள் மீது ஒரு யுத்தத்தைப் பிரகடனம் செய்துகொண்டு மறுபுறம் சர்வதேச பௌத்த மாநாடு கூட்டி 'தம்மபதத்'தைப் போதனை செய்வதில் சிங்கள அரசுக்கு முரண்பாடே எழுவதில்லை. அவசரக்காலச் சட்டம் பூரணமாக நீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவசரகாலச் சட்ட விதிகள் எதுவும் இல்லாமலேயே சிங்கள அரச படைகள் தமிழீழ மண்ணில் தமது அட்டூழியங்களைக் கொண்டு நடத்த பயங்கரவாதத் தடைச் சட்டம் சகல வசதிகளையும் செய்து கொடுக்கிறது. பொது மக்களின் அசௌகரியங்கள் எதனையும் கணக்கில் எடுக்காமல் ஒரு கிழமை என்ன, இரண்டு கிழமைகள் கூட ஊரடங்குச் சட்டங்கள் பிரகடனப் படுத்தபடாமலே தமிழீழ மண்ணில் அமுல்படுத்தப் பட்டு விடுகின்றன. சாதாரண நீர் வாகங்கள் அனைத்தும் இராணுவ அதிகாரியின் கைகளில் விடப் பட்டு விடுகின்றன. பாடசாலைகள் மூடப்பட்டு விடுகின்றன; பஸ் சேவை ஸ்தம்பித்து விடுகின்றது. இராணுவத்தின் அராஜக வேட்டை ஆரம்பமாகி விடுகிறது.

ஏற்கெனவே நடந்து முடிந்த இனப்படுகொலைகளும் புதிதாகப் படுகொலை செய்வதற்குத் தூபமிடுகின்றன. வெலிக்கடைச் சிறையிலே நடைபெற்ற இனப் படுகொலைக்குப் பிறகு இப்போது சிறைகளில் எதுவும் நடக்கலாம் என்றாகிவிட்டது. இராணுவ முகாம்களில் நடைபெறும் அட்டூழியங்களுக்கு அளவேயில்லை. உயிரோடு தமிழர்களைக் கொளுத்துவதும், கடைகளை எரிப்பதும், பஸ்களில் - ரயில்களில் பயணம் செய்பவர்களை வழியில் மறித்து வெட்டிக் கொல்வதும் பழகிப் போன — பார்த்த — சாதாரணமான சங்கதிகளாகி விட்டன. சிங்கள மக்களுக்கு இவைப் பழகிப் போய்விட்டன. எனவே, இந்த இனப் படுகொலைத்திட்டம் தொடக்கச்சியாகச் செயற்படுத்தப் படும்போது ஆரம்பத்தில் இருந்த உறுத்தல்கள் இப்போது நீங்கிப் போன நிலையில் இவை இன்று தடையின்றி அமுலாகின்றன.

தமிழ்மக்களின் மீதான இந்த இனப்படுகொலைத் திட்டம் இன்று ஸ்தாபனமயப்படுத்தப்பட்டு விட்டது. இனப்படுகொலையை சுமுகமாக நடத்தி முடிக்கும் வகையில் நாட்டின் அரசயந்திரமும் நிர்வாகமும் பூரணமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. சிங்கள பேரினவாதம் பௌத்த மடாலயங்களிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரை ஊற்றுக் கண்டுள்ளது. ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் சிங்கள வெறிக் குட்டையில் தங்கள் பேனைகளைத் தோய்த்து எழுதுகின்றன. சிறை அதிகாரிகளில இருந்து சிறைக்கைதிகளும் சேர்ந்து தமிழ் அரசியல் கைதிகளைக் கொலை செய்த சம்பவங்கள் சாமான்யமான நிகழ்ச்சியாகி விட்டன. அரசு டைகளும் தமிழீழ மண்ணில் நாளாந்தம் நரவேட்டை ஆடிவருகின்றன. ஒருபுறம் படுகொலைகளை நடத்தி, மறுபுறம் நாசூக்கான முறையில் இக்கொலைகளையும் அழிவுகளையும் நியாயப் படுத்தும் கலையை இன்று அரசின் பிரசார ஸ்தாபனங்கள் திறமையுடன் நிறைவேற்றுகின்றன. லலித் அத்துலத் முதலி பத்திரிகைக்காரர்களைக் கூட்டி வைத்து எந்த வெட்கமும் இல்லாமல் பச்சைப் பொய்களைச் சொல்லி வருகின்றான். வெளிநாட்டுத் தூதுவர்கள் என்ற பெயரில் சிங்கள அரசு நியமித்திருக்கும் கூலிகளும் கொழும்பிலிருந்து கிலோ கணக்கில் அரசு அனுப்பிவைக்கும் பொய் அறிக்கைகளைத்தத்தம் நாடுகளில் பரப்பிவருகிறார்கள். 'வடக்கிலே புலிகள்' என்ற பூச்சாண்டியை சிங்கள அரசியல் வெறியர்கள் சாதாரண கூட்டுறவுக்கடைத் திறப்பு வைபவத்திலிருந்து சர்வதேச மகாநாடுகள்வரை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஜனநாயகத்தைப் பேணவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டவும், நாடு துண்டாடப்படுவதைத் தடுக்கவும், தமிழ் மக்களுக்கு பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாப்பு வழங்கவும் தான் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடுகிறோம் என்று கூறிக் கொண்டே ஸ்ரீலங்கா பாசிஸ அரசு தனது இனப்படுகொலையை தொடர்ந்து நடத்துகிறது. சாதாரண—நிராயுதபாணிகளான அப்பாவிமக்களை வீதியிலும், வீடு புகுந்தும் சுட்டுக்கொன்றுவிட்டு அவர்களை 'பயங்கரவாதிகள்' என்று அறிவித்துவிடுகிறது. ''அரசபடைகளுடனான மோதலில் 70 பயங்கரவாதிகள் கொல்லப் பட்டுவிட்டனர்'' என்று ஸ்ரீலங்காவின் வானொலிச் சேவையின் சிங்கள ஒலிபரப்பை சாதாரண சிங்களக் கிராமத்துப் பெட்டிக் கடைகளில் சந்தோஷத்துடன் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கிலே கட்டவிழ்ந்து விடப் பட்டுள்ள இனப் படுகொலை அரசு தரப்பில் பூர்ணமாக சிங்கள மக்கள் மத்தியில் நியாயப்படுத்தப் படுகிறது.

''பயங்கரவாதிகள் வங்கிகளைக் கொள்ளையடித்துள்ளனர்; அரசாங்கக் கட்டிடங்களையும் பொலிஸ் நிலையங்களையும் தாக்கியுள்ளனர்; பாதுகாப்புப் படையினரைக் கொன்றுள்ளனர். இவர்களின் நோக்கம் பாரிய வன்முறை அழிவை ஏற்படுத்துவதுதான்'' என்று லலித் அத்துலத்முதலி ஆகஸ்ட் 10ம் திகதி கொழும்பில் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் குறிப்பிட்டுள்ளான்.

ஸ்ரீலங்கா அரசின் பாசிஸ இன ஒழிப்பினை நியாயப்படுத்தும் பாங்கில் இவன் பேசுவதை நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஆனால் இதில் வேதனைக்குரிய விஷயமென்னவெனில், ஆள்வோரும் அவரது துதிபாடிகளும் மட்டுமல்ல அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த இனத்தின் மத்தியிலும் இந்த இனப் படுகொலையை நியாயப்படுத்தும் வாதங்கள் இன்று முன் வைக்கப் படுகின்றன

''சுத்த இராணுவவாதக் கண்ணோட்டத்துடன் தாக்குதலை நடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இன்றைய நடவடிக்கைகளே எமது மக்கள் இன்று எதிர் நோக்கும் நெருக்கடி நிலைக்குக் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது'' என்று தமிழீழ விடுதலைக்காகச் சென்னையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் 'விடுதலை' இயக்கங்கள் விடுத்துள்ள அறிக்கைக்கும் லலித் அத்துலத் முதலியின் அறிக்கைக்கும் வித்தியாசமே இல்லை.

இந்த அறிக்கையின் சாராம்சம் என்ன?

ஒடுக்கப்பட்ட ஒரு இனத்தின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த பன்னிரண்டு வருட காலமாக சகல வல்லமையும் கொண்ட ஒரு அடக்குமுறை அரசுக்கு எதிரான ஒரு கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது ஒடுக்கப்பட்ட ஒரு இனம் பிரயோகிக்கும் வன்முறை.

இது நியாயமானது.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் புறக்கணித்து அவர்களின் ஆயுதப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க, தமிழ் மக்களைப் பயங்கரமாக அச்சுறுத்த ஸ்ரீலங்கா பாசிஸ அரசு ஈவிரக்கமில்லாத இனப் படுகொலையைச் செய்து கொண்டு வருகிறது; நிராயுதபாணிகளான அப்பாவி மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

இது அடக்குமுறை அரசு பிரயோகிக்கும் வன்முறை.

இது அநியாயமானது; அருவருக்கத்தக்கது.

ஒடுக்கப்பட்ட ஒரு இனத்தின் ஆயுத வன்முறை தான் ஒரு அடக்குமுறை அரசு கட்டவிழ்த்து விடும் இனப் படுகொலைக்குக் காரணம் என்று இந்தப் போலிப் புரட்சிவாதிகள் சொல்லுவார்கள்.

தர்மத்தின் பேராலும் சத்தியத்தின் பேராலும் மனுக்குலத்தின் பேராலும் இந்த இனப்படுகொலையை நிபந்தனை எதுவுமின்றி முற்போக்கான சிந்தனையுள்ளவர்கள் கண்டித்தாக வேண்டும். ஒரு இன அழிவை—இனப் படுகொலையை எதுவும் நியாயப் படுத்தமாட்டாது.

அதர்மத்திற்கும் அடக்குமுறைக்கும் எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் கிளர்ந்தெழும்போது ஒடுக்குமுறை அரசு புரட்சிவாதிகளைக் கொன்றொழித்தும் பொது மக்களை அச்சுறுத்தியும் கிளர்ச்சியை ஒடுக்கமுனைவதனை விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மூன்றும் உலக நாடுகளில் பரக்கக் காணலாம்.

இன்றும் எல் சல்வடோரில் ஒவ்வொரு நாளும் விடியும்போது புதிதாக பதினைந்து சடலங்கள் வீதிகளில் வீசப்பட்டுக் கிடப்பதைக் காணலாம். 1979 லிருந்து இன்றுவரை நிராயுதபாணிகளான வெகுஜனங்களில் 40,000 பேருக்குமேல் கொல்லப்பட்டுள்ளனர்; இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் காணமல் போயிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

குவாத்தமாலாவில் அரசியல் காரணங்களுக்காக கடைசி ஐந்து வருடங்களில் 80,000 பேர் சுடப் பட்டு அல்லது சித்திரவதைக்குட் படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். ஒரு நாளில் அங்கு குறைந்தது பன்னிரண்டு பேராவது அரச படைகளால் சுட்டுக் கொல்லப் பட்டு வீதிகளில் வீசி எறியப் படுகிறார்கள்.

சித்திரவதை செய்து அவயங்களைச் சிதைத்து சடலங்களை அரச படைகள் வீதிகளில் வீசி எறிவது மனோரீதியாக மக்களை அச்சுறுத்தும் ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாகும். மக்கள் அடக்குமுறையை எதிர்க்கத் துணியாமல் அதற்குச் சரணாகதியடையச் செய்வதே இதன் நோக்கம்.

கிழக்கு திமோரில் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் அடக்குமுறை அரசால் கொல்லப்பட்டு விட்டனர்.

ஆனால் இந்தப் படுகொலைகளைக் கண்டு அந்த நாடுகளின் புரட்சியாளர்கள் தமது கெரில்லாத் தாக்குதல்களைக் கைவிட்டு விடவில்லை. போதுமான நவீன ஆயுத வசதிகளும் இல்லாத நிலையிலும் எல் சல்வடோரில் கெரில்லாத் தாக்குதல்கள் தொடர்கின்றன. ஒரு துப்பாக்கியை வைத்துக் கொண்டு ஐந்து கெரில்லா வீரர்கள் கைமாற்றிப் பாவிக்கிற நிலைமைதான் அண்மையில் அங்கு காணப்பட்டது. ஒடுக்குமுறையாளர்கள் அப்பாவி மக்களைப் படுகொலை செய்து பயமுறுத்த முயலும்போது, மேலும் மேலும் மிகுந்த ஓர்மத்துடன் கெரில்லா வீரர்கள் ஒடுக்குமுறைக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொள்ள முனைகிறார்கள்.

''பாதுகாப்புப் படைகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் கடைசி இரு தினங்களாக நடைபெற்ற யுத்தத்தில் 70 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.''

''கடந்த 24 மணித் தியாலத்தில் மூன்று இடங்களில் நடைபெற்ற மோதலில் 31 கெரில்லாக்கள் கொல்லப் பட்டுள்ளனர்.''

''கைதடியில் மேலும் 10 பயங்கரவாதிகள் கொல்லப் பட்டுள்ளனர்''

ஸ்ரீலங்கா தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி பத்திரிகை வாயிலாகவும் வானொலி மூலமாகவும் தொடர்ச்சியாக அவிழ்த்துவிட்டிருக்கும் விஷமத்தனமான பொய்ப் பிரச்சாரங்கள் இவை.


வல்வெட்டித்துறையை மயான பூமியாக்கி, கடற்படைப் பீரங்கிகளால் வீடுகளைத் தாக்கித் தரைமட்டமாக்கி, மீனவர்களின் படகுகளையும் குடிசைகளையும் எரித்து, நூற்றுக்கும் அதிகமான சிறுவர்களையும் 'பயங்கரவாதச் சந்தேக நபர்கள்' என்று கைது செய்தும் அப்பாவி மக்களைச் சுட்டும் வெறியாட்டம் நடத்தும் கொலைவெறியன் லலித் அத்துலத் முதலி ''கடற்படையிடம் பீரங்கிகளே இல்லை; பீரங்கித் தாக்குதல் வல்வெட்டித்துறையில் எங்குமே நடைபெறவில்லை'' என்று பூதாகரமான பொய்யைச் சொல்லியிருக்கிறான்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தமிழ் இளைஞர்களைக் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் உள்ளே அடைத்து வைத்து விட்டு பொலிஸ் மிருகங்கள் பொலிஸ் நிலையத்தைக் கைவிட்டு வெளியேறியபோதுதம் சகோதரர்களை மீட்டெடுக்கும் முயற்சியில் எமது இயக்கத்தைச் சேர்ந்த

1. மயிலிட்டியைச் சேர்ந்த சஞ்சீவி எனப்படும் மகேஸ்வரநாதன் (23 வயது)
2. சுன்னாகத்தைச் சேர்ந்த நிகே எனப்படும் நிகேதரன் (24வயது)

ஆகிய இரண்டு பேர் மாத்திரமே மரணமடைந்துள்ளனர்.

அப்பாவி மக்களைக்கொன்று விட்டு பயங்கரவாதிகளைக் கொன்று விட்டதாக அரசு பரப்பி வரும் பொய்த்தகவல்களில் துளியும் உண்மை இல்லை.




www.eelamview.com

# மக்கள் மத்தியில்

இரண்டாம் உலகப் போரின் போது பிலிப்பைன்ஸ் தீவுகள் ஜப்பானியரால் கைப்பற்றப்பட்டன. ஜப்பானிய ஆக்கிரமிப்பாளருக்கெதிரான வெற்றிகரமான தேசிய விடுதலைப் போராட்டத்தை நடாத்திய ஹுக்பலஹாப் என்னும் தேசிய விடுதலை கெரில்லாப் படையின் கொள்கை விதிகளே கீழே தரப்பட்டுள்ள அடிப்படைத் தார்மீகக் கோட்பாடு என்னும் பிரகாரம்.

இப்பிரகாரம் ஒரு புரட்சிகரப் படையின் தன்மை எதுவாயிருக்க வேண்டும் என்பதை எமக்கு விளக்குகிறது.

ஹுக் படையின் தளமாக அமைந்த மத்திய லூசோன் என்னும் பிரதேசம் வளம்மிகுந்த விவசாயப் பகுதியாகும். பிலிப்பைன்ஸ் ஸ்பானியரின் நீண்டகால காலனித்துவ ஆதிக்கத்திலிருந்தது. ஸ்பானியர் அறிமுகம் செய்த ஹசியென்டா விவசாய முறைமைகள், ஒரு சில பணம் படைத்த நிலக்கிழார்களையும் படுமோசமான அண்டனுக்கடிமைப்படுத்தப்பட்ட பல வறிய விவசாயிகளையும் உருவாக்கியிருந்தது. ஸ்பானியரின் கைகளிலிருந்து அமெரிக்கக் காலனித்துவ ஆதிக்கத்தின் கையிலும்—பின்பு சுயாட்சி என்ற பேரில் பிலிப்பைன்ஸ் பிரதானிகளின் கையிலும் ஆட்சி மாறியபோதும், அடிப்படைச் சமூக மாற்றமெதுவுமின்மையால் ஏழை விவசாயிகளின் வாழ்க்கை நிலையில் எதுவித மாற்றமுமேற்படவில்லை. இப்பிரதேசத்தில் காலங்காலமாக நிகழ்ந்த விவசாயக் கிளர்ச்சிகள் ஒரு புரட்சிகர பாரம்பரியத்தை நிலைநாட்டியிருந்தன. இதனால் 1930களில் இங்கு காணப்பட்ட விவசாய இயக்கங்கள் தீவிர இடதுசாரிச் சார்புடையனவாய் இருந்தன. 1942ம் ஆண்டு ஜப்பான் பிலிப்பைன்ஸை ஆக்கிரமித்தது. இதன்பின் இவ்வியக்கங்கள் அணிதிரண்டு, கடும் முனைப்புடன் இயங்கின. இக்கால கட்டத்தில் மத்திய லூசோனில் காணப்பட்ட புரட்சிகர சக்திகள் ஜப்பானிய விரோத மக்கள் இராணுவம் என்னும் அமைப்பை ஸ்தாபித்தன. இதுவே ஹுக்போ கொரில்லாப் படை எனப் பெயர் பெற்றது.

இந்த கெரில்லாப் படைகள் ஜப்பானியருக்குப் பெருஞ்சவாலாக அமைந்தன. ஆயிரக்கணக்கான ஜப்பானியப் போர்வீரரை ஹுக் கெரில்லாக்கள் கொன்றொழித்தனர். பெரிய எஸ்டேட்டுக்கள் போன்ற ஹசியென்டாக்களுக்கு அதிபதிகளாகவிருந்த நிலக்கிழார்கள் . பலர் ஜப்பானியருடன் ஒத்துழைத்தனர். இத்தகைய துரோகச் செயல்களிலீடுபட்டவர்களை ஹுக் கெரில்லாக்கள் கொன்றனர். அவர்களுக்குச் சொந்தமான பாரிய நிலங்களை சுவீகரித்து தமது சொந்த பிராந்திய ஆட்சி அமைப்புகளை ஸ்தாபித்தனர். தாமே சட்டங்களியற்றி நீதி பரிபாலனம், வரி அறவிடுதல் போன்ற கடமைகளையும் பொறுப்பேற்றனர். நூற்றாண்டு காலமாக அடிமை வாழ்வைத் தவிர வேறெதையுமே அறியாத ஏழை விவசாய மக்கள் முதன்முறையாக ஜனநாயக நடைமுறை என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பை ஹுக்போ கெரில்லாக்களே ஏற்படுத்தித் தந்தனர்.

ஜப்பானியரை வெற்றிகரமாக அடித்துத் துரத்தியபின் ஹுக் கெரில்லாக்கள் ஆக்கிரமிப்பாளருக்கெதிரான போராட்டத்தை முழுமையான ஒரு விடுதலைக்கான போராட்டமாக தொடர்ந்து விஸ்தரிக்க எண்ணினர். ஆனால் இப்போராட்டத்திற்குத் தலைமை வகித்த பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி, கெரில்லாப்படைக் குழுக்களைக் கலைத்து, சட்டபூர்வமான பாராளுமன்ற போராட்ட வடிவங்களை தேர்ந்தெடுத்தது. இது மிதவாத, பிற்போக்குச் சக்திகளுக்குத் தம்மை மீண்டும் நிலைநாட்டிக்கொள்ள நல்லதொரு வாய்ப்பாகப் போய்விட்டது. அமெரிக்க இராணுவ உதவியுடன் இம்மிதவாத அரசாங்கங்கள் எல்லாவகையான போராட்டங்களையும் நசுக்கி தமது சுயரூபத்தைக் காட்டின. தமது ஆயுதங்களை முற்றாகச் சரண் செய்யாத ஹுக் கெரில்லாக் குழுக்கள் மீண்டும் ஆயுதப் போராட்டத்தில் குதித்து வேகமாக முன்னேறி வந்தன. 2-ம் உலகப் போரின் பின் உச்சகட்டத்தை அடையத் தொடங்கிய அமெரிக்க நவகாலனித்துவத்தின் புதிய தந்திரோபாயங்களுடன் மூன்றாம் உலக நாடுகளின் புரட்சிகர சக்திகளுக்கு அவ்வளவு பரிச்சயம் ஏற்பட்டிருக்கவில்லை. இத் தந்திரோபாயங்களுக்கெதிரான சரியான பாதையைக் காட்ட பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி தவறியது. இதனால் பிலிப்பைன்ஸ் அரசுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் பாரிய சவாலாக அமைந்த தீரமிக்க கெரில்லாக்கள் பலர் மடிந்தனர். இருந்தும் மத்திய லூசோனில் விதைக்கப்பட்ட புரட்சியின் வித்துக்கள் முற்றாக அழியவேயில்லை. இன்று, மார்க்கோஸின் பாஸிஸ அரசுக்கெதிரான பலம் வாய்ந்த போராட்டத்தை நடாத்தும் புதிய மக்கள் இராணுவத்தின் (NPA) முன்னோடிகளே இந்த ஹுக் வீரர்கள்.

**ஒரு மக்கள் இராணுவத்தில் பதவி ஸ்தானங்களை வகிப்பவர்களுக்கும் சாதாரண வீரர்களுக்குமிடையே சமத்துவம் நிலவுவதும் அவர்களிடம் சிநேகபூர்வமான உறவும் ஒற்றுமையும் காணப்படுவதும் மக்கள் இராணுவத்தின் உயிர்நாடியான அம்சங்களாகும். பதவி ஸ்தானங்களை வகிப்பவர்களுக்கும் சாதாரண வீரர்களுக்கும் இடையில் ஏன் சமத்துவம் நிலவ வேண்டும்? ஏனெனில், ஒரு புரட்சிகர இராணுவமானது புரட்சிவாதிகளால்தான் அமைக்கப்படுகிறது. புரட்சிவாதிகளின் அரசியல் நிலைப்பாடு ஒரு இலட்சியத்தையே கொண்டதாதலால் பதவி ஸ்தானங்களை வகிப்பவர்களையும் வீரர்களையும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்றோ ஏழை, பணக்காரன் என்றோ பாகுபடுத்தி நோக்கக் கூடாது. அவர்கள் புரட்சிகர மக்கள் இராணுவத்தில் சேர்வது சம்பளம் வாங்குவதற்கோ பதவிகளை வகிப்பதற்கோ அல்ல; தேசிய சுதந்திரத்திற்கும் சமூக விடுதலைக்கும் போராடுமுகமாகவே அவர்கள் மக்கள் இராணுவத்தில் இணைந்துள்ளனர். பதவி வகிப்பவர்களுக்கும் வீரர்களுக்கும் இடையில் உண்மையான சமத்துவத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமே முழு இராணுவமும் ஒன்றுபட்டு இறுதி வரை வைராக்கியத்துடன் போராடுவது சாத்தியமாகும்.**

### ஏன் இந்த உறவு?

மக்கள் இராணுவத்தில் சிநேகபூர்வமான உறவும் ஒற்றுமையும் ஏன் காணப்பட வேண்டும்? ஒரே விதமான அரசியல் இலட்சியத்தை நோக்கமாகக் கொண்டவர்களை தோழர்கள் என்று கூறலாம். தோழர்கள் ஒருவருக்கொருவர் சிநேகபூர்வமானவர்களாகத் திகழ வேண்டும். இத்தகைய சிநேகபூர்வமான உறவானது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்வதை ஊக்குவிக்கிறது. ஒற்றுமையே பலமாகும். எவ்வளவு தூரம் ஒற்றுமை காணப்படுகிறதோ அவ்வளவிற்கு வலிமையும் அதிகரித்துக் காணப்படும். யுத்தம் என்பதே வலிமையின் உரைகல் தான். எதிரியை வெல்ல வேண்டுமானால் நாம் எதிரியை விட வலிமையானவர்களாக திகழ வேண்டும். நாம் ஒற்றுமைப்பட வேண்டும். ஒற்றுமை கைகூட வேண்டுமானால் நாம் ஒன்றிணையத் தக்க ஒரு பொதுவான அரசியல் இலட்சியத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். ஆகவே பதவி ஸ்தானங்களை வகிப்பவர்களும் வீரர்களும் ஒருவருக்கொருவர் சிநேகபூர்வமானவர்களாகத் திகழ்ந்து, ஒரே அங்கமாகச் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படும்போது அவர்கள் உருக்கிலேயொத்த போராடும் ஆற்றலைக்கொண்டு காணப்படுவார்கள்.

ஹுக் படையில் தனிப்பட்ட அங்கத்தவர்களிடையே எவ்வித வேற்றுமையும் பாராட்டப்படமாட்டாது. அடக்குமுறை இராணுவங்களில் உயரதிகாரி சாதாரண வீரர் என்பதற்கு ஈடாக ஹுக் படையில் எதுவுமே இருக்காது.

படைகளின் அங்கத்தவர்கள் யாவரும் புரட்சிகர தோழர்கள். ஒருவருமே இன்னொருவருக்கு அவமரியாதையான வார்த்தைகளைச் சொல்ல அனுமதி கிடையாது. ஒருவருமே இன்னொருவரை இழிவாகப் பார்க்க முடியாது. ஒருவரும் இன்னொருவரை பலவந்தம் பண்ண முடியாது. ஒரு கூட்டத்தில் யாரும் தன் கருத்தை முன் வைக்கலாம். பிரச்சினை எழும்பொழுது பெரும்பான்மையாளரின் கருத்தே சரியான கண்ணோட்டம் எனக் கொள்ளப்படும். இது ஆமோதிக்கப்பட்டு வலுப்பெறும். எல்லோருக்கும் ஒரே விதி, ஒரே சுக துக்கங்கள். தலைவர்களே வீரர்கள் பின்பற்றக் கூடிய முன் மாதிரியாக வாழ வேண்டும்... அவமதிப்பு, பலவந்தம், சூழ்ச்சி ஆகியன தடை செய்யப்படல் வேண்டும்... தலைவர்களும் தங்கள் கீழிருக்கும் வீரர்களை மரியாதை செய்து அன்பு செலுத்த வேண்டும். தமக்கு முன்பு தம் வீரர்களின் நலன்களைக் கவனிக்க வேண்டும். தங்கள் அநுபவங்களை வீரர்களுடன் பரிமாறிக் கொள்ள வேண்டும். அவரவர்களின் பிழைகளை மற்றோர் விமர்சிக்க வேண்டும்... வீரர்களோ, தலைவர்களோ தனிப்பட்ட சலுகைகள் எதனையும் அநுபவிக்க முடியாது.

### மக்கள் நலன்

"ஒரு புரட்சிகர இராணுவம் மக்களை நேசித்துப் பாதுகாப்பது மட்டுமன்றி அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாயும் அமைய வேண்டும். மக்களின் சுக துக்கங்களை தமதாகவே கருத வேண்டும்... மக்களின் நலனுக்காகவே போராட வேண்டும். மக்களின் நலன்களே தனது நலனென எண்ணியே எல்லாக் கருமங்களையும் ஆற்ற வேண்டும். தான் போகுமிடங்களிலெல்லாம் மக்களுக்கு உதவிபுரிய வேண்டும். இப்படிச் செய்வதனால் தான் விடுதலை இராணுவமானது மக்களின் விசுவாசத்தையும் ஆதரவையும், உதவியையும் பெறலாம்; மக்களூடாகவே எதிரியையும் வெல்லலாம்."

மக்கள் தங்களை ஒன்று திரட்டும் போது அவர்களுக்கு உதவி செய்யவும், அவர்களுடைய அமைப்புகளுக்கு ஆதரவு வழங்கவும், கடைசியாக மக்களுடனான எமது எல்லா உறவுகளிலும் ஒரு கிராமத்திற்கு முதல் வரும் பொழுதும் விட்டுச் செல்லும் பொழுதும், அவர்களுடன் தொடர்பு கொள்ளும் பொழுதும், வேலை செய்யும் பொழுதும்---எந்நேரத்திலும் எமது வீரர்களைப் பொது இலட்சியத்திற்கு ஆதரவு திரட்டுமுகமாக பிரச்சாரம் செய்யுமாறு ஊக்குவித்தோம். ஒவ்வொரு படைப் பிரிவிலும் அரசியல் போதனாசிரியர்கள் வீரர்கள் மத்தியில் அரசியல் வகுப்புகள் நடாத்திய பின் ஒவ்வொரு வீரரும் எல்லாக் கிராமங்களிலுள்ளும் ஒற்றுமை, போராட்டம் ஆகியவை பற்றிய எமது செய்தியை கொண்டு செல்வார்கள்.

கடைசி வரைக்கும் மிகக் கடினமான ஒரு போராட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி ஏன் ஒரு புரட்சிகர இராணுவம் இன்னல்களையும் துயரங்களையும் கண்டு தளராமல் போராட வேண்டும் எனவும் விளக்கிறோம்.

### சுய கட்டுப்பாடு

ஒரு புரட்சிகர இராணுவம் ஒரு அரசியல் இலட்சியத்தை அடைவதற்காகவே போராடுகிறது. உதாரணமாக ஜப்பானியருக்கெதிரான போராட்டம் ஜப்பானியரை தோற்கடித்து தேசிய விடுதலையைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்விலட்சியத்தை அடையும் வரை இப்போராட்டம் நிறுத்தப்பட மாட்டாது. முடிவு வரையும் போராடுவதால் தான் இலட்சியம் கைகூடும். ஒரே ஒரு வீரன் மாத்திரம் எஞ்சியிருந்தாலும் இப்போராட்டம் தொடர்ந்தேயாக வேண்டும். வெற்றியின்றி, எதிரியுடன் எந்தவொரு ஒப்பந்தத்துக்கும் உடன்படுவது, நாம் புரட்சியில் நம்பிக்கையிழந்து விட்டோம் என்றே அர்த்தப்படும். அத்துடன்---எதிரிக்கு முன்னால்---நாம் அடிபணிந்து போகிறவர்களாகி விடுவோம். எதிரிக்குச் சரணடைதல் துரோகத்தனமான கேவலமானதொரு குற்றமாகும்.

ஒவ்வொரு வீரனும் தானாகவே முன்வந்து கடினமான கட்டுப்பாட்டை அனுசரிக்கும்படி ஊக்குவிக்கப்பட்டான். அடக்குமுறை இராணுவங்கள் வீரர்கள் மத்தியில் கட்டுப்பாட்டை நிலைநாட்ட பயமுறுத்தல்கள், தண்டனைகள் ஆகியவற்றை பயன்படுத்துகின்றன. எல்லோரையும் விதிமுறைகளை அனுசரிக்கப் பண்ணுவதற்கு பலாத்காரம் பண்ணும் நிலைமைகளில் உண்மையில் இராணுவத்தின் கட்டுப்பாடு மிகவும் தளர்ந்துபோய் விடுகிறது. காரணம் இங்கு விதிமுறைகளை விருப்புடன் தாமாகவே முன்வந்து அனுசரிப்பதில்லை. ஆகவே அதிகாரிகள் முன்னிலையில் விதிமுறைகளை அனுசரிப்பதுபோல் பாசாங்கு செய்து அவர்கள் இல்லாதபோது---கட்டுப்பாடு பற்றி எல்லாவற்றையும் மறந்து போய் விடுகிறார்கள். இத்தகைய கட்டுப்பாடு போலியானது; நீண்ட காலத்திற்கு நிலைநாட்ட முடியாததொன்று.மாறாக நாமோ **மிக இறுக்கமான கட்டுப்பாட்டை நிலைநாட்டி வருகிறோம். காரணம் இது ஒவ்வொரு அங்கத்தவரினதும் சுய பிரக்ஞையுடன் கூடியதொரு கட்டுப் பாடாகும்.**

சுய கட்டுப்பாட்டிற்கு உதவியாக புரட்சிகர வீரருக்கு நாம் 'எட்டு வேண்டுகோள்களை' விடுத்தோம்.

1. எச்சரிக்கையுடன் செயற்படுக.
2. வேகமாக செயற்படுக.
3. ஆயுதங்களைப் பாதுகாக்கவும்.
4. உடமைகளில் கவனம் செலுத்தவும்.
5. நேரந் தவறாது கருமமாற்றவும்
6. நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் இருக்கவும்.
7. சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்கவும்.
8. மரியாதையாகப் பழகுங்கள்.

வீரர்களை அடிப்பது, ஏசுவது, சித்திரவதை செய்வது எச்சூழ்நிலையிலும் தடை செய்திருந்தோம். பதிலாக ஒரு வீரன் தனது கடமைகளையும் இலட்சியங்களையும் புரிந்து கொள்ளக் கூடியவாறு ஒரு குறிப்பிட்ட நடைமுறையை அனுசரித்தோம். கூட்டங்கள், ராணுவத்தினுள்ளே

**" அழகிய ஏரி போன்ற**
**உங்கள் நகரம் கலங்கியது —**
**துஷ்ட மீன்களென**
**கலகக்காரர்கள் நுழைந்ததால்.**
**மீன்களைப் பிடிக்க**
**ஏரி நீரை முற்றாக**
**இறைக்க வேண்டும்.**
**வெளியேறுங்கள் —**
**கிளர்ச்சியின் களமான**
**உங்கள் நிலத்தை விட்டு.**
**எச்சரிக்கை !**
**புரட்சிவாதிகள் ஒளியாதிருக்க**
**உங்கள் வீடுகள்**
**சுவர்களற்றுத் திறந்திருக்கட்டும்.**
**செல்லுங்கள்**
**காவல் சூழ்ந்த முகாம்களுக்கு "**
**என்றான் அந்த இராணுவத் தலைவன்.**

**வெறுங்கையோடு கிளம்பினோம்.**
**நாங்கள் மாற்றப்பட்டிருப்பது**
**எந்த இடமோ தெரியவில்லை.**
**எங்கள் மண்ணுக்கு**
**எப்போது திரும்புவோம்**
**என்பதும் தெரியவில்லை.**
**நேற்றே**
**பெருமளவு ஆட்கள்**
**நிர்ப்பந்திக்கப் பட்டனர் —**
**புதிய ரப்பர் தோட்டமிட,**
**' அழகிய ஏரியில் '**
**புதுவெள்ளம் பாய்ச்ச**
**கட்டாய சேவையாம் !**

**துயரத்தை மேவியது**
**பயம் சிலபோது ;**
**இப்பொழுதோ கோபம்.**
**இதோ, எங்கள்**
**விழிப்பின் ஆரம்பம்.**

**ஒரு பிலிப்பைன்ஸ் கவிதை**



www.eelamview.com

# கெரில்லாக்கள்

சிறு அமைப்புக்கள் ஆகியவற்றின் உதவியுடன் கூட்டாகச் செயற்படும் ஒரு முறையின் மூலம் ஒவ்வொரு வீரனுக்கும் இப் புரிந்துணர்வு ஊட்டப்பட்டது. இக் கூட்டு முறைமையின் தலைமைக்கு அடிப்படை தலைவர்களின் முன்மாதிரியான நடத்தையாகும். வெகுசனங்களிலிருந்தே நாம் எமது உறுதியையும், பலத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை நாம் எப்பொழுதும் வலியுறுத்திக் கூறினோம்.

### கிராமிய ஐக்கியப் பாதுகாப்பு அணி

ஜப்பானியருக்கெதிரான எமது ஆயுதப் போராட்டம்பற்றி மாத்திரம் எடுத்துக் கூறுவது ஹுக் பலஹுப் இயக்கத்தைப் பற்றிய பாதிக்கதையை மாத்திரம் சொல்வதாகும். மக்களின் எதிர்ப்பியக்கத்தின் முக்கிய மையமாக சாதாரண பெருஜனங்கள் வாழ்கின்ற கிராமங்களே திகழ்ந்தன. சட்டப்படி எவ்வாறுயினும் நடப்பின்படி உண்மையான ஆட்சி எதுவும் பிலிப்பைன்ஸ் மண்ணில் நடைபெறவில்லை. அத்தகைய ஆட்சி எதுவும் இல்லாத நிலையில் நாம் அவ்வாறான ஆட்சியினை உருவாக்கி மக்களின் கைகளில் கொடுத்தோம். கிராமிய ஐக்கியப் பாதுகாப்பு அணி (Barrio United Defence Corps-BUDC) என்ற அமைப்பிற்கூடாகவே இதனை நாங்கள் செய்தோம்.

எமது ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளின் ஒரு கட்டம்தான் BUDC ஆகும். இவ்வமைப்புக்குரிய தனியான இராணுவக் கட்டமைகள் இருந்தன. இவை தத்தமது ஆயுதந் தாங்கிய அங்கத்தவர்களைக் கொண்டிருந்தன. அத்துடன் விடுதலை இராணுவத்துடன் நெருங்கிய உறவுகொண்டிருந்தன. ஆனால் இவையெல்லாவற்றிற்கும் மேலான விசேட அம்சம் யாதெனில் இவை கிராமங்களுக்கு இதற்கு முன் என்றுமே அறிந்திராத புதிய அநுபவத்தைக் கொண்டு வந்தன.

**1.** வீடுகளைக் கடந்து செல்லும் அரச படையினருக்கு வீடுகளின் உட்புறம் வெளியிலிருந்து பார்க்கும்போதே தெரிய வேண்டும் என்பதற்காக அவற்றின் சுற்று மறைப்புகள் இவ்வாறு பிலிப்பைன்ஸில் சிதைக்கப்படுகின்றன.
**2.** தான் இறந்து விட்டதாக அரசால் பரப்பப்பட்ட பொய்ப் பிரசாரத்தை மறுக்க ஹுக் தலைவர் டாருக் காமிரா முன் தோன்றுகிறார்.
**3.** ஹுக் கெரில்லாக்களின் இருப்பிடத்தை மணிலா போலீஸ் முற்றுகையிடுகிறது.

அதுதான் ஜனநாயக ஆட்சி முறையாகும். நூற்றாண்டு காலமாக நிலைபெற்று வந்த ஸ்பானிய, அமெரிக்கக் காலனித்துவ அடக்குமுறையின் கீழிருந்த மக்களுக்குத் தங்களைத் தாங்களே நிர்வகிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

எங்களுடைய ஆதிக்கத்தில் இருந்த — எங்களது படைப் பிரிவினுல் பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்த பிரதேசங்கள் — அதாவது கெரில்லாப் பிரதேசங்களில்தான் இந்த BUDC குழுக்களை அமைத்தோம். மற்ற இடங்களில் நாம் நிவாரணச் சங்கங்களையும், கொள்ளை எதிர்ப்புச் சங்கங்களையும் அமைத்தோம். இவை உண்மையில் தலைமறைவு அமைப்புக்களாகும். பல தடவைகளில் எதிரியின் அமைப்புகளுக்குள் ஊடுருவி அவற்றைச் செயலிழக்கச் செய்தோம்.

சில பிரதேசங்களில் யுத்த காலத்துக்கு முன்னதாகவே விவசாயிகளின் சங்கங்கள் செயற்பட்டிருந்தன. ஆகவே இங்கு மக்கள் தம்மை ஒன்றுதிரட்டிக் கொள்வதற்கும், போராட்டங்கள் நடத்துவதற்கும் நன்கு பழக்கப்பட்டிருந்தனர். இந்த இடங்களில் எமக்கு ஆரம்பத்திலிருந்தே முழுமையான வெகுஜன ஆதரவு இருந்தது. இருந்தும் எமது படைகள் புதிய பிரதேசங்களை அணுகும் பொழுது, புதிய பிரச்சினைகள் கிளம்பின.

### உளவாளிகள்

ஜப்பானியரின் அடிவருடிகள் அல்லது உளவாளிகள் உள்ள அல்லது ஜப்பானியச் சார்பு கொண்ட கிராமங்களுக்குள் செல்லும்போது நாம் எதிர்கொண்ட பிரச்சினைகள் முற்றிலும் வித்தியாசமானவையாகும். சில வேளைகளில் நாம் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும்போது ஒரு கிராமத்தின் நிலவரங்கள் எத்தகையன எனத் தெரியாமலும் உட்செல்ல வேண்டிவருகிறது. அந்நிலைமைகளிலும் ஒரிருவரைக் கிராமத்தினுள் அனுப்பி, யார் உளவாளிகள் என்றும் அவர்கள் வாழுமிடங்கள், அவர்களின் நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய முழுத் தகவல்களையும் பெற்றுக் கொள்வோம். பின்பு பலத்த காவலுடன் சென்று கிராமத்தைச் சுற்றி வளைத்து யாரையும் வெளியே போகவிடாமலும் கிராமத்திற்குள் வந்தோரை அங்கேயே தங்கவும் செய்வோம். பின்பு சகல உளவாளிகளையும் கைதுசெய்து, ஒரு பாடசாலை அல்லது கோயிலில் பகிரங்கக் கூட்டத்திற்கு அவர்களைக் கொண்டு வருவோம். துரோகிகளைக் கைது செய்யவே வந்தோம் என்பதை மக்களுக்கு விளக்குவோம். நாம் சேகரித்துக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலேயே அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன் வைப்போம். குற்றச்சாட்டுகள் சரியானவையா அல்லது மேற்கொண்டு ஏதாவது சேர்க்க இருக்கின்றதா என மக்களைக் கேட்டுக்கொள்வோம். மக்கள் குற்றச்சாட்டுக்களை மறுத்தால் கைதுசெய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள். குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டால் கைது செய்யப்பட்டவர்கள் தாமே முன்வந்து எதிரிக்கு உதவினர்களா அல்லது எதிரியின் பலவந்தத்தின் பேரில் உதவினர்களா என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிப்போம். பலாத்ரிய தாமாகவே முன்வந்து எதிரிக்கு உதவியவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும். மக்கள் ஆமோதிக்கும் சிலர் கொல்லப்படுவார்கள். ஏதாவது நிர்ப்பந்தத்தின்பேரில் உதவியவர்களுக்கு விடுதலை இயக்கத்தின் கோட்பாடுகளைப் பற்றி விளக்கிக் கூறுவோம். ஆனல் அவர்கள் தங்கள் பழைய நிலைப்பாட்டில் இருந்தே பணியாற்றுவதாகக் காட்டிக்கொண்டு மறைமுகமாக ஜப்பானிய எதிர்ப்பு வேலைகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கப்படுவர்.

கிராம மக்களிடையே புரட்சிகர உணர்வு நன்கு ஊட்டப்பட்டதும், எமது படைகள் கிராமத்தை விட்டுச் செல்லும். ஆனல் சில காலத்திற்குப்பின் கிராமத்தின் அரசியல் நிலைமை முன்னேற்றம் கண்டுள்ளதா என்பதைக் கண்காணிக்க மீண்டும் திரும்பிவரும். இந்த இடைக்காலங்களில் முன்பு கேள்விக்கிலக்காகியவர்கள் மீண்டும் எதிரிக்கு உதவியிருந்தால், அவர்கள் கைது செய்யப்பட்டு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு படையுடன் கொண்டு செல்லப்படுவர். இவ்வேளையில் அவர்களுக்கு இடைவிடாது அரசியல் கல்வி புகட்டப்படும். அவர்கள் உண்மையில் மனம் மாறினல் ஜப்பானிய எதிர்ப்பு வேலை செய்வதற்காக மீண்டும் அனுப்பப்படுவார்கள். இவர்கள் கிராமத்துக்குத் திரும்புவதைக் கண்ட கிராம மக்களுக்கு ஹுக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை பிறந்தது. அத்துடன் ஹுக் இயக்கத்தின் கையில் அகப்பட்டவர்கள் யாவரும் கொல்லப்படுவார்கள் என்ற எதிரியின் பொய்ப்பிரசாரமும் முறியடிக்கப்பட்டது. இதற்கிடையில் கிராமம், ஐக்கிய முன்னணி—பாங்கில் ஒழுங்கமைக்கப்பட்டது.

### அரசியல் அமைப்பு

விடுதலை இராணுவத்தினர் மட்டுமே கிராமத்தில் புரட்சிகர வேலைகளிலீடுபட்டனர் என்பது உண்மையல்ல. பெரும்பாலும் அடிமட்டப் பிரச்சார வேலைகளும், அமைப்புகளைக் கட்டியெழுப்புதலும்—பயிற்றப்பட்ட அமைப்பாளர்களினுல் மேற்கொள்ளப்பட்டன.

நாம் போருக்குப் போவதற்கு எப்படி ஆயுதங்கள் தேவையோ அப்படியே அமைப்புகளை கட்டியெழுப்புவதற்கு அமைப்பாளர்கள் தேவைப்பட்டனர். இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் நாம் ஆயுதம் தரித்தவர்களானோம். ஒரு சில தொழிற்சங்கவாதிகளையும் வெகுஜன இயக்கங்களில் நீண்டகால அனுபவஸ்தர்களையும் கொண்டு அமைப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கான உத்திகளைக் கற்பிப்பதற்கு நாமே எமது பாடசாலைகளை ஆரம்பித்தோம். இந்த வெகுஜனப் பாடசாலைகள்—போர்க்காலம் முழுவதிலும் நடத்தப்பட்டன. நூற்றுக்கணக்கான வெகுஜனப் பிரசாரகர்கள் இப்பாடசாலைகளில் பயிற்றப்பட்டார்கள். தலைமறைவு வேலை செய்வதற்கான வழிமுறைகள், கெரில்லாக் குழுக்கள் மற்றும் இயக்கங்கள் மத்தியில் ஒற்றுமையைக் கொண்டு வருவதற்கான வழிகள், ஜனநாயகக் கோட்பாடுகள், எமது தேசிய விடுதலைக்கான போராட்டத்தின் மரபுகள், ஜப்பானியக் கட்டுப்பாட்டிலிருந்த சங்கங்களை ஊடுருவிப் போராடும் வழிமுறைகள் ஆகியவற்றில் இப்போராளிகள் பயிற்றப்பட்டார்கள். இவர்களே களத்தினுள் தனியாகவும், இருவர் மூவராகவும் சென்று நாம் நமது நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான அத்திவாரத்தைக் கட்டியெழுப்பினர்கள். இவர்களில் பலர் தன்னந்தனியராய்ச் சாவை எதிர்கொண்டு தம்முயிரையே கூட இழந்துள்ளனர். ஆனல், மக்களின் நெஞ்சில் இவர்கள் நிரந்தரமாய் வாழ்கிருர்கள்.

### மக்கள் யுத்தத்தின்போது

ஒரு கிராமம் பியுடிசி இன் கீழ் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பின் ஆக்கிரமிப்பாளர்கள், துரோகிகள் என்ற சமுத்திரத்தின் மத்தியில், விடுதலையடைந்த ஒரு தீவு போலத் திகழ்ந்தது. கிராமத்தினுள் துரோகிகளும், உளவாளிகளும் எம்மால் ஒழிக்கப்பட்ட பின், எமது படைகளுடன் மக்கள் முழுமையாக ஒத்துழைத்து ஒற்றுமையாக வாழ்ந்தனர். எதிரியின் கண்ணுக்குப் புலப்படாமல் மக்கள் தாமாகவே சுய கட்டுப்பாட்டை அநுட்டித்தனர். ஒரு மக்கள் யுத்தத்தின் தேவைகட்கேற்ப பியுடிசிக்கள் மூன்று வகையான நடவடிக்கைகளிலீடுபட்டிருந்தன.

(1) ஆயுதந் தாங்கிய போராட்டத்துக்கு உதவுதல். இது மிகவும் முக்கியமானது.
(2) விடுதலை இராணுவத்திற்கும் சேர்த்து உணவு வழங்கக் கூடிய, ஆனல் எதிரிக்கு உணவுப் பொருள்கள் போய்ச் சேர்வதைத் தடுக்கும் ஒரு பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தல்.
(3) போர் முடிவடைந்ததன் பின் ஒரு புதிய ஜனநாயக பிலிப்பைன்ஸை உருவாக்கக் கூடிய அரசியல் கண்ணேட்டங்களை மக்கள் மத்தியில் வளர்த்தெடுத்தல்.

BUDC மூலமாக ஹுக் படைக்கு உதவக்கூடிய மக்களைக் கிராமத்தில் பெருமளவுக்கு திரட்டக் கூடியதாயிருந்தது. இவர்கள் சிசர்வுப்படை போன்றே செயற்பட்டனர். களத்தில் நிற்கும் ஒவ்வொரு ஹுக் படையில் பணியாற்றும் சந்தர்ப்பம் வரும்வரையில் கிராமத்தில் உற்பத்தி வேலைகளில் அல்லது போராட்டம் சம்பந்தமான இதர அலுவல்களில் ஈடுபட்டிருந்தனர். இந்த வீரர்கள் தொடர்ந்தும் போர்ப்பயிற்சி பெறக்கூடிய வசதிகளை BUDC தலைவர்கள் செய்து வந்தனர்.

பொதுவாகக் களத்திலிருக்கும் ஒரு வீரன் விடுமுறையில் செல்லும் போது அந்த இடத்திற்கு கிராமத்திலிருந்து ஒரு வீரன் போய்ப் பணியாற்றுவான். இதனுல் கிராமத்திலுள்ள ரிசர்வு வீரனும் ஓர் அநுபவம் வாய்ந்த கெரில்லாவாக மாறுவான். கடலில் மூழ்கியிருக்கும் பனிப்பாறை போல் மக்கள் மத்தியில் ஒரு விடுதலை இராணுவத்தை எம்மால் கட்டி எழுப்பக் கூடியதாயிருந்தது.

ஹுக் படைகள் ஒரு கிராமத்தில் அல்லது கிராமத்திற்கு வெகு அருகாமையில் எதிரியுடன் போர் புரிவதைத் தவிர்ப்பதில் விசேஷ கவனம் செலுத்துவதுண்டு. காரணம், ஜப்பானியர்கள் கிராமத்து மக்கள் ஹுக் படையினருக்கு உதவியளிக்கிருர்கள் எனச் சந்தேகித்து, அவர்களைப் பழிவாங்குவதைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே. ஒரு கிராமத்தின் சுற்று வட்டாரத்தில் ஒரு தாக்குதலை நடத்துமுன் அக்கிராமத்தின் பாதுகாப்புக் குழுத் தலைவருடன் தொடர்பு கொண்டு அக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற முயல்வோம். நிலைமைகள் நெருக்கடியாக இருக்கின்றபோதும் கிராமத்தை எமது பாதுகாப்பாகப் பயன் படுத்துவதற்குக் கிராம மக்களின் அனுமதியைப் பெற முயற்சிப்போம்.

BUDC நிர்வாகம் குறைகளே அற்றது என்று சொல்லி விடுவதற்கில்லை. சில வேளைகளில் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் செயற்படாமல் இருந்து விடுவார்கள். பல சந்தர்ப்பங்களில் அவர்கள் உருவாக்கிய திட்டங்கள் நடைமுறைக்கு ஒத்துவராத—கற்பனுஉலகம் சார்ந்தவையாக இருந்தன. இருந்தும் மத்திய லூசோனில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஜனநாயக ஆட்சியுடனுன முதல் அநுபவம் இதுவே. அடக்குமுறையின் போது மக்கள் சுயமாகவே தம் சமூக-வாழ்க்கைக்கான வழி முறைகளை உருவாக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் நடைமுறைத்தேவைகளும் பரீட்சார்த்தமான தீர்வுகளும் இணைந்து நடைபோடும். இவ்வாறு மிகச் சிறந்த—சரியான வழியைக் கண்டு பிடிக்கலாம். BUDCயின் அநுபவங்களும் அதன் முன்னேடியான வழிகாட்டலும் உள்ளூரில் மக்களாட்சியை நிலைநாட்டுவதற்கு ஒரு படிக்கல்லாக அமைந்தது. விடுதலைப்போரின் கடைசிக்கட்டத்தில் சிறிய அளவில் இத்தகையதொரு மக்களாட்சியைக் கட்டியெழுப்பத் தொடங்கினேம். இதனுல் மக்களின் அநுபவங்களின் எல்லைகள் தொடர்ந்து விசாலித்துக்கொண்டு வந்தன.









www.eelamview.com

# புலிகளின்

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றையும் எமது புரட்சி இயக்கத்தின் ஆயுதப் போராட்ட வடிவத்தையும் புரிந்து கொள்ள முடியாமல் குழம்பும் பழைய மரபு மார்க்சியவாதிகளும், ரொட்சியவாதிகளும், எமது போராட்டத்தை 'சேகுவாராயிசம்' என்று விமர்சிக்க முனைகிறார்கள். நாம் வரித்துக் கொண்ட கெரில்லாப் போராட்ட வடிவம் எந்தவொரு தனி மனிதனதோ அன்றி ஒரு நாட்டினதோ கோட்பாட்டினைத் தழுவியதாக நெறிப்படுத்தப்படவில்லை. உலகளாவிய ரீதியில் குமுறி வரும் விடுதலைப் போராட்டங்களையும் புரட்சிகளையும் நாம் உன்னிப்பாகக் கற்றறிந்து, இந்த உலகானுபவத்திலிருந்து எமது பார்வையை கூர்மைப்படுத்தி வருகிறோம். உலகத்தின் பல முனைகளில் ஒடுக்கப்படும் மக்களால் தொடுக்கப்படும் புரட்சிகரப் போர் முறைகளிலிருந்து நாம் கற்றுக்கொள்வதற்கு நிறையவுண்டு. எனினும் எமது போராட்டத்தின் தனித்துவத்தை உணர்ந்து, எமது வரலாறு மற்றும் யதார்த்த புறநிலைகளுக்கு ஏற்ப எமது ஆயுதப் போர் வடிவத்தை நிர்மாணித்திருக்கிறோம். ஆயுதப் போராட்ட வடிவங்களில் ஒன்றான கெரில்லாப் போர்முறை கியூபாப் புரட்சிக்கு மட்டும் பரீட்சிக்கப்படவில்லை. அன்றி சேகுவாரா மட்டும் அதனை செழுமைப்படுத்தவில்லை. உலகளாவிய ரீதியில் ஒடுக்கப்படும் மக்கள் கையாண்டு வரும் போர் வடிவம் அது. உலக ஏகாதிபத்தியமானது இன்று அப்பட்டமான பலாத்காரம் மூலமாகவே தனது ஆதிக்கத்தை மூன்றாம் உலகில் நிலை நிறுத்தி வருகிறது. சர்வாதிகார இராணுவ அரசுகளை உருவாக்கி, அடக்குமுறையை அதிதீவிரப்படுத்தி சுரண்டப்படும் மக்களினத்தின் புரட்சிகர எழுச்சிகளை நசுக்கி வருகிறது. இந்த வன்முறையான அரச இயந்திரத்தையும் அதன் பலாத்கார ஒடுக்குமுறையையும் சமாதான சாத்வீக மார்க்கங்களால் எதிர்கொண்டு போராட முடியாதென உணர்ந்து கொள்ளும் மக்கள், வன்முறையை வன்முறையாலேயே எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஒரு பலம் பொருந்திய இராணுவ சக்திக்கு எதிராக நிராயுதபாணிகளாக நிற்கும் மக்கள், தமது வன்முறைப் போரை தொடங்குவதற்கு கெரில்லாப் போர்த் தந்திரோபாயம் இன்றியமையாததாக அமைந்து விடுகிறது. இந்த வகையில் கெரில்லாப் போர் வடிவமானது ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகர வன்முறைப் போராக மாறிவிடுகிறது. ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இன்றியமையாததான இப் போர் வடிவம் தென் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் வெற்றிகளைப் பெற்றிருக்கிறது. வெற்றிப் பாதையில் வீறுநடை போட்டு வருகிறது.

கார்ல் மார்க்ஸ், லெனின் ஆகியோரது மறைவுக்கு பின்னரகவே தேசிய விடுதலைப் போராட்டங்கள் பரந்த அளவில் உலக அரங்கில், குமுறி வெடித்தன. தேசிய விடுதலை இயக்கங்கள் தத்தம் நாடுகளின் வரலாறு, புறநிலைகளுக்கு ஏற்பப் போராட்டப் பாதையை நெறிப்படுத்திக் கொண்டன. இந்தப் போராட்ட நடைமுறைகள் பழைய மரபு மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளுக்கு சவால் விடுவதாகவும் அமைந்தன. வெகுசன அமைப்பை (கட்சியை) உருவாக்கி, வெகுசனங்களை ஸ்தாபன ரீதியில் அணி திரட்டி, அவர்களை புரட்சிக்குத் தயார்படுத்தி, அதன் பின்னர் ஒரு புரட்சிகர இராணுவத்தைக் கட்டி எழுப்பி, அதற்கப்புறம் போராட்டத்தை நடத்துவது என்ற பழைய மரபுக் கோட்பாடு நடைமுறை சாத்தியமற்றது எனப் பல புரட்சி அனுபவங்களிலிருந்து தெளிவாகியிருக்கிறது. அடக்குமுறை ஆட்சியதிகாரம் அதிகொடூரமாகத் தாண்டவமாடும் சூழ்நிலைகளில், அரசுக்கு எதிரான ஒரு புரட்சி இயக்கம் வெகுசன அமைப்புகளை கட்டி எழுப்புவதென்பது இலகுவான காரியமல்ல. கட்சி அமைப்பிற்குப் பதில் தலைமறைவான ஒரு கெரில்லா இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு, அவ்வியக்கம் படிப்படியாக வெகுசன அரங்கில் ஆயுதப் போரை விரிவுபடுத்தி, மக்கள் சமூகத்தில் வேரூன்றி வளர்ந்து, மக்கள் இயக்கமாகப் பரிணமம் பெறுவது என்பது சில புரட்சி அநுபவங்கள் மூலம் நிரூபணமாகியிருக்கிறது. கியூபாப் புரட்சியிலும் இந்த வழிமுறையே கடைப்பிடிக்கப்பட்டது. ஒரு கெரில்லா அணி மக்கள் விடுதலை இராணுவமாக, மக்கள் விடுதலை இயக்கமாக மாறலாம்; புரட்சிவாதிகளும் மக்களுமாக ஒரு புரட்சியைத் தோற்றுவிக்கலாம் என்பது சேகுவாரா, காஸ்ட்ரோ போன்றோரின் நிலைப்பாடு. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புரட்சி அனுபவத்தில் எழுந்த இந்தப் புதிய அணுகுமுறையை பழைய மரபு மார்க்சியவாதிகளும், ரொட்சியவாதிகளும் ஜீரணித்துக்கொள்ள மறுக்கின்றனர். இந்தப் போராட்ட அணுகுமுறையை சேகுவாராயிசம், இராணுவவாதம், மார்க்சிய விரோத தத்துவம் என்று எல்லாம் வாய்க்கு வந்தபடி பிதற்றி வருகிறார்கள். எமது விடுதலை இயக்கத்தின் கெரில்லாப் போராட்டமும் இந்தப் பிழையான தத்துவத்தில் நெறிப்படுத்தப் பட்டிருக்கிறது என்பது இவர்களது கருத்து.

எமது தேசிய விடுதலைப் போராட்டமும் அதனை முன்னெடுக்க நாம் வரித்துக் கொண்ட ஆயுதப் போர் வடிவமும் எமது வரலாற்று சூழ்நிலைகள், யதார்த்த புறநிலைகள் ஆகியனவற்றை அனுசரித்தே நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் குருட்டுத்தனமாக எந்த அந்நிய புரட்சி வடிவங்களையோ, புரட்சித் தத்துவத்தையோ அன்றிப் போர்த் தந்திரோபாயங்களையோ பின்பற்றவில்லை. அதேபோல பழைய மரபு மார்க்சிய கோட்பாடுகளை, அதாவது லெனின், ரொட்ஸ்கி காலத்து ரஷ்ய சூழ்நிலையில் வார்க்கப்பட்ட தத்துவார்த்தக் கருத்துக்களை புதிய சூழ்நிலையில், எமது சூழ்நிலையில் அப்படியே திணித்து விடலாம் என நம்பவும் இல்லை. ஒவ்வொரு புரட்சியும் அதற்கேயுரிய வரலாற்றைக் கொண்டிருக்கிறது. அதற்கேயுரிய தனித் தன்மைகளைப் பெற்றிருக்கிறது; அந்தந்த வரலாற்றுச் சூழ்நிலைகளை அனுசரித்தே அந்தந்தப் புரட்சியை முன்னெடுக்க கொள்கைத் திட்டம், செயற் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்பது எமது கருத்து. இந்த வகையில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமும் எமது இயக்கத்தின் போராட்டப் பாதையும் எமக்கே உரித்தான வரலாற்று சூழ்நிலைகளால் பிரசவமான தனித்தன்மைகளைக் கொண்டது.

லெனினின் கட்சியமைப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் நாம் ஒரு மக்கள் இயக்கத்தை கட்டி எழுப்புவது என்பது எமது சூழ்நிலைக்கு சாத்தியமாகாத காரியம். சிங்கள இனவாத பாசிச அரசின் அடக்குமுறையின் கீழ் ஒரு புரட்சிகரக் கட்சியை, அதுவும் தேசிய விடுதலையையும் சோசலிசப் புரட்சியையும் இலக்காகக் கொண்ட ஒரு கட்சியைக் கட்டி எழுப்புவதென்பது இலகுவான காரியமல்ல. தேசிய விடு



# இ

www.eelamview.com

"நாம் குருட்டுத்தனமாக எந்த அந்நியப் புரட்சி வடிவங்களையோ, புரட்சித்தத்துவத்தையோ, அன்றிப் போர் தந்திரோபாயங்களையோ பின்பற்றவில்லை"

தலைக் கோரிக்கையை தேசத் துரோகம் எனக் கொள்ளும் இந்த சர்வாதிகார அரசு, தேசிய விடுதலையை இலட்சியமாகப் பூணும் எந்தவொரு மார்க்சியக் கட்சியையும் 'சட்ட ரீதியான' வெகுஜன அமைப்புகளைக் கொண்ட மக்கள் இயக்கமாக வளரவிடப் போவதில்லை. தேசிய விடுதலைக்கு ஆதரவளித்து வந்த தமிழ் அகதிகள் புனர்வாழ்வு இயக்கம், காந்தீயம், ஈழ மாணவர் மன்றம் ஆகிய அமைப்புக்கள் செயலிழந்த கதையை யாவரும் அறிவர்.

அடுத்ததாக, தமிழீழமானது முதலாளித்துவம் முதிர்ச்சி கண்ட ஒரு முன்னேறிய பிரதேசம் அல்ல. முதலாளித்துவப் பொருள் உற்பத்தி உறவுகளின் முரண்பாட்டால் தோற்றம் கொள்ளும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் என்ற ஒரு வர்க்கம் வடக்குக் கிழக்கில் இன்னும் வளர்ந்துவிடவில்லை. மலையகத் தோட்டப் பாட்டாளி வர்க்கத்தை எடுத்துக் கொண்டால் அவர்களோ இன்னும் தொண்டமானின் தொழிற்சங்க அமைப்பில் சிறைபட்டுக் கிடக்கிறார்கள். இந்த நிலையில், தமிழீழத்தில் தொழிற் சங்க அமைப்புகளை உருவாக்கி பாட்டாளி வர்க்கப் புரட்சியை செய்துவிடலாம் என்ற ரொட்சியவாதிகளின் கற்பனாவாதத்தை ஏற்றுக் கொள்ள நாம் தயாராக இல்லை.

தமிழர் தேசியப் பிரச்சனையின் வரலாற்று திருப்பங்கள் காரணமாக ஆயுத எதிர்ப்பு இயக்கம் தோன்றியது. 'சட்ட ரீதியான', சமாதான வழி தழுவிய போராட்டங்கள் நசுக்கப்பட்டதாலும், அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க எமது மக்களுக்கு வேறெந்த மார்க்கங்களும் இல்லாததாலும், அரச பயங்கரவாத வன்முறையை எதிர்கொண்டு போராட வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்ததாலும், புரட்சிகர ஆயுத எதிர்ப்பு இயக்கம் (Revolutionary armed resistance Movement) பிறப்பெடுத்தது. இந்த ஆயுத எதிர்ப்பு இயக்கத்திற்கு முன்னோடியாகத் தோன்றிய விடுதலைப் புலி இயக்கம் தலைமறைவு இயக்கமாகவே அன்றும் இன்றும் இயங்கி வருகிறது. தலைமறைவான ஒரு ஆயுத எதிர்ப்பு இயக்கமாக இயங்கிய எமக்கு நகர்ப்புற கெரில்லாப் பாணியிலான போர் வடிவம் எமது பிரத்தியேக சூழ்நிலைக்கு இன்றியமையாததாக விளங்கியது. நீண்டகால கெரில்லாப் போர்முறைத் திட்டத்தை வகுத்துக் கொண்ட நாம் மறைமுகமான மைய நிலைகளை மக்கள் மத்தியில் உருவாக்கிறோம். இம் மைய நிலைகள் தலைமறைவான மக்கள் அமைப்புகளன்றி வேறெதுவுமல்ல. விவசாயிகள், தொழிலாளிகள், இளைஞர்கள், மாணவர்கள், புத்திஜீவிகள் ஆகிய அனைவர் மத்தியிலும் எமது இயக்க அமைப்புகள் வேரூன்றி வருகின்றன.

சோசலிசப் புரட்சி என்ற இலக்கில் தேசிய விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் ஒரு புரட்சி இயக்கம் என்ற ரீதியில் மக்கள் போராட்டத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் ஒன்றிணைத்த வேலைத் திட்டத்தில் எமது இயக்கம் செயல்பட்டு வருகிறது. தேசிய விடுதலை எனும் பொழுது அது மக்கள் போராட்டத்தையும் (Mass Struggle) சோசலிசப் புரட்சி எனும்பொழுது அது வர்க்கப் போராட்டத்தையும் (Class Struggle) தழுவி நிற்கிறது. முன்னதில் பரந்துபட்ட மக்கள் வர்க்க ஜாதி வேறுபாடற்ற முறையில், ஒரு தேசிய மக்கள் கூட்டமாக அணி திரட்டப்படுதல் அவசியமாகிறது. பின்னதில் புரட்சிகர வர்க்கத்தின் தலைமை முக்கியமாகிறது.

ஒரு பரந்துபட்ட வெகுஜனப் போராட்டமான தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய முதலாளி வர்க்கத்தின் பங்களிப்பும் அவசியமாயினும் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி, போராட்டத்தை முன்னெடுக்கும் தகைமையோ, தகுதியோ இவ்வர்க்கத்திடம் இல்லை என்பதை எமது விடுதலை வரலாறு நிரூபணமாக்கியுள்ளது. இவர்கள் சிங்கள தரகு முதலாளி வர்க்கத்துடன் பேரம் பேசி தமிழினத்தின் விடுதலையை விற்றுவிடவே சதா முனைந்து வந்தனர். உலக முதலாளித்துவ, ஏகாதிபத்திய சக்திகளின் ஊடுருவல்களுக்கு இடமளித்துவரும் இன்றைய தேசிய முதலாளித்துவ வர்க்கத்தை ஒரு சனநாயக முற்போக்கு சக்தியாக கொள்ள முடியாது. இவர்கள் தமது அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிவர தேசிய விடுதலை கோஷம் எழுப்பியபோதும் சமுதாயப் புரட்சியின் விரோதிகளாகவே விளங்குவர். சமூகத்தின் அடித்தளத்திலிருந்து சதா சுரண்டப்பட்டு ஒடுக்கப்படும் மக்களின் சமூக, பொருளாதார சுபீட்சத்திற்கு இவர்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. எனவே, சோசலிசப் புரட்சியை இலக்காகக்கொண்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் முதலாளி வர்க்கத் தலைமைக்கு இடமேயில்லை. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தலைமையைக் கொண்ட ஒரு விடுதலை இயக்கமே சோசலிசப் புரட்சியை முன்னெடுக்கும் தகைமையைப் பெற்றது. தமிழீழத்தில், புரட்சிகர வர்க்கம் என்னும்பொழுது, முதலாளிய சுரண்டலுக்கும், சாதியமைப்பு ஒடுக்குதலுக்கும் ஆளாகியிருக்கும் சமுகத்தின் கீழ்மட்டத்து மக்களையே குறிக்கிறோம். சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் தொழிலாள, விவசாயப் பாட்டாளி வர்க்கங்களின் அபிலாசைகளையே எமது இயக்கத் தலைமை பிரதிபலிக்கிறது.

தேசிய விடுதலை என்ற இலக்கை அடைவதற்கு நாம் வரித்துக்கொண்ட ஆயுதப் போராட்டப் பாதையானது எமது அரசியல் போராட்டத்தின் முன்னேற்றமான ஒரு விரிவாக்கமேயாகும். தேசிய முரண்பாட்டால் எழுந்த அரசியல் நெருக்கடியானது வன்முறை வடிவத்தில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறது. பிற்போக்கான வன்முறைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட புரட்சிகர வன்முறையாக, தர்மத்தையும், சமாதானத்தையும் வேண்டி ஒடுக்கப்படும் மக்கள் நடாத்தும் புரட்சிகர விடுதலைப் போராகவே எமது ஆயுதப் போராட்டம் அமையப் பெற்றது எனலாம். சிங்கள இனவாத அடக்குமுறையினரின் அதர்மத்திற்கு எதிராக வரித்துக் கொள்ளப்பட்ட கெரில்லாவழித் திலான எமது ஆயுதப் போராட்டம் படிப்படியாக ஒரு மக்கள் யுத்தமாக, பரந்துபட்ட வெகுசன ஆயுதப் போராக மாற்றப்படும். உறுதியான கட்டுப்பாடான அரசியல் - இராணுவ அமைப்பையும், புரட்சிகரத் தலைமையையும், தெளிவான சித்தாந்த தரிசனத்தையும் கொண்ட முன்னணிப் படையாக விளங்கும் எமது இயக்கம் இந்த மக்கள் யுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.



**தமிழீழக் காடுகளில் புலிகளின் போர்ப் பயிற்சி**

# ஆயுதப்பாதை

www.eelamview.com

# லூயிசா

நிக்கராகுவாவில் சோமோசாவின் அடக்குமுறை இராணுவத்திற்கெதிரான போராட்டத்தில் லூயிசா சுட்டுக் கொல்லப்பட்டபோது அவளுக்கு வயது 21 தான். இன்று நிக்கராகுவாவில் பெண்கள் இயக்கம் லூயிசாவின் பெயரையே தாங்கி நிற்கிறது. FSLN இன் முதல் பெண் போராளியான லூயிசா அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் போராடிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பெண் போராளிகளுக்கு ஆதர்சமாக விளங்குகிறாள்.

1971 இல் லூயிசா சுட்டுக் கொல்லப்பட்டபோது நிக்கராகுவாவில் பெண்கள் இயக்கம் அத்துணை விரிவடைந்திருக்கவில்லை. 1977 ஆம் ஆண்டிற்குப்பின் கெரில்லா யுத்தம் தீவிரமாகி, உள்நாட்டுப் போர் ஆரம்பித்த பின்புதான் அம்புறொனெக் (AMPRONAC) பெண்கள் இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டு விரிவடைகிறது. ஆகவே கெரில்லா இயக்கம் கருக்கட்டிக்கொண்டிருந்த காலத்திலே இயக்கத்துடன் இணைந்து போராடி இறந்து போய்விட்ட லூயிசாவை இளந்தலைமுறையைச் சேர்ந்த பெண் போராளிகள் நேரில் பார்த்ததேயில்லை.

## விடுதலைப் போராட்டத்தில் பெண்கள்

இன்று நிக்கராகுவாவின் சான்டினிஸ்டா புரட்சிகர அரசாங்கம் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறது. இந்நேரம் நிக்கராகுவப் பெண்கள், ஆண் போராளிகளுடன் தோளோடுதோள் நின்று தமது நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் காப்பதற்கு முன்னணியில் நின்று போராடுகின்றனர். நாட்டைப் பாதுகாக்கவெனப் புரட்சிகர அரசாங்கம், மக்களை அணிதிரட்ட அறைகூவல் விடுத்த பொழுது பல பெண்கள் தாமாகவே முன்வந்து, மக்கள் குடிப் படைகளில் (people's militia) பங்கெடுத்தனர். இப்படைகளில் பெண்களின் பங்களிப்பு பெருகியதால் நிக்கராகுவாவின் AMNLAE (லூயிசா அமான்டா எஸ்பினோஸா நிக்கராகுவப் பெண்கள் இயக்கம்) என்ற பெண்கள் இயக்கம் ஒரு பெண்கள் ரிசர்வ் படையை ஸ்தாபிக்க உழைத்தது. இந்த முதல் வெற்றியை அடிப்படையாக வைத்துக்கொண்டு, பெண்கள் புரட்சிகர அரசாங்கத்திடம் மேலும் சில வேண்டுகோள்களை விடுத்தனர். இதன் பலனாக இன்று இரு தனி பெண்படைப்பிரிவுகள் சான்டினிஸ்டா இராணுவத்தில் உள்ளன. மூன்றும் படைப் பிரிவொன்றை ஸ்தாபிக்கவும் தனியே பெண்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்குமான ஆயத்தங்களை இன்று புரட்சிகர அரசாங்கம் செய்து வருகிறது. பெண்கள் மக்கள் குடிப்படைகளின் மூலம் தாமும் ஆயுதந்தாங்கிப் போராடக்கூடியவர்கள் என நிரூபித்த பின்பு ஆண் போராளிகள் பெண்களின் கோரிக்கைகளை மறுக்க முடியவில்லை.

1979ம் ஆண்டு சான்டினிஸ்டாக்கள் சோமோசாவின் சர்வாதிகார ஆட்சியை முறியடித்து புரட்சிகர அரசாங்கத்தை நிறுவினர். இப்புரட்சியை ஸ்திரப்படுத்துவதற்காக எல்லா அரசியல் சமூக மட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வதையே AMNLAE என்ற பெண்கள் இயக்கம் அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது. சமுதாயத்தின் புரட்சிகர மாற்றங்களுக்காக உழைக்கும்பொழுது, ஒரு புரட்சிகர நடைமுறையில் பங்குபெறும் பொழுது, பெண்களின் விடுதலையும் நடைமுறையில் சாத்தியமாகின்றது என இவ்வியக்கம் நம்புகிறது. இவ்வகையில் AMNLAE பல்வேறு அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் பெண் புரட்சியாளர் எல்லோரையும் ஒன்றிணைக்கும் ஒரு தேசிய இயக்கமாயிருக்கின்றது. இவ்வியக்கத்தினூடாக பெண்கள் புரட்சிகர இராணுவத்தில் மாத்திரமல்ல, பொருளாதார உற்பத்தி, கல்வி, சமூக சேவை போன்ற துறைகளிலும் அதிகம் பங்களிப்பது இப்போது சாத்தியமாகியுள்ளது.

சோமோசாவின் நீண்ட சர்வாதிகார ஆட்சிக்கெதிராக சான்டினோவுடன்கூட பெண் போராளிகள் போராடியுள்ளனர். FSLNஇன் நீண்ட வரலாற்றில், தனிப்பட்ட பெண்கள் பலர் அனுதாபிகளாகவும், ஒரு சிலர் கெரில்லாக்களாகவும் போராடியுள்ளனர். ஆனால் 1977ம் ஆண்டில்தான் பாரிய அளவில் பெண்கள் இயக்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதற்குமுன் FSLNஉம், வேறு இயக்கங்களும் பெண்களை அணிதிரட்ட முயன்று வெற்றியடையவில்லை. FSLNஇன் கெரில்லாத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத சோமோசாவின் பாஸிஸ அரசு மக்கள்மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது. இது 1977-ல் உச்சகட்டத்தை அடைந்தபொழுது மனித உரிமைகளுக்காகப் போராடவும் சோமோசா ஆட்சிக்கெதிரான ஒரு குரல்கொடுப்பதற்குமென AMPRONAC (தேசியப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிக்கராகுவப் பெண்கள் அமைப்பு) என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

AMPRONAC ஆரம்பத்தில் தடுப்புக்காவலில் உள்ளோரின் மீதான சித்திரவதை, ஏழை விவசாயிகள் கூட்டம் கூட்டமாகப் படுகொலை செய்யப்படுதல், ஏழை விவசாயப் பெண்கள் கற்பழிக்கப்படுதல் போன்றவற்றை எதிர்த்துக் குரல்கொடுத்தது. 'காணாமல் போன எங்கள் விவசாய சகோதர சகோதரிகள் எங்கே?'

FSLN பெண்களின் போர்ப் பயிற்சி.



என்பதே அவர்கள் கோஷமாயிருந்தது. பல்வேறு பூர்ஷுவா இயக்கங்கள் மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுத்தபோதும் AMPRONACஇல் மாத்திரமே பூர்ஷுவா பெண்கள்கூடத் தங்கள் ஏழை விவசாய சகோதரர்களுக்காகக் குரல்கொடுத்தனர். நாட்டின் நிலைமை மோசமாகிக்கொண்டுவர, AMPRONAC இயக்க அங்கத்தவர்கள் பலரும் தவிர்க்க முடியாதபடி தலைமறைவாக இயங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத்துடன் அங்கத்தவர்களிடமிருந்து கூடிய அர்ப்பணிப்பும் தேவைப்பட்டது. இத்தகைய சூழல் உருவாகத் தொடங்கியதும் இயக்கத்தில் பூர்ஷுவா பெண்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு, கூடுதலாக அடிமட்டங்களிலிருந்தே பெண்கள் முன்வந்தனர். உள்நாட்டுப்போரின் கடைசிக் கட்டங்களில் AMPRONAC, பல்வேறு துறைகளில் உழைப்பதற்கு மக்களை அணிதிரட்டுவதில் ஒரு முன்மாதிரியாக விளங்கியது. நகரங்களில் பல 'அயலோர் சங்கங்களை' உருவாக்கியது. பல்வேறு அமைப்புக்களை ஒன்றிணைக்கும் ஓர் இயக்கமாகவும் AMPRONAC விளங்கியது.

எந்தவொரு குறைவிருத்தி நாட்டிலும் உள்ளதுபோல நிக்கராகுவாவிலும் ஏழை விவசாயக் குடும்பங்கள் வேலைதேடி நகரமையங்களை நோக்கி இடம்பெயரும். கிராமங்களில் பொருளாதார நிலைமை, அடக்குமுறை போன்றவை காரணமாக இடம்பெயரும் குடும்பங்கள் நகரத்திற்கு வெளிப்புறமாக அமைந்துள்ள சேரிகளில் குடியேறும். அறுவடைக் காலங்களில் பெரும்பாலான ஆண்கள் தமது குடும்பங்களை விட்டுவிட்டுக் கிராமங்களுக்குச் சென்றுவிடுவார்கள். இப்படிப் போகும்போது நிரந்தரமாகவே தமது மனைவி, குடும்பத்தைக் கைவிட்டுவிட்டு, போகின்ற இடங்களில் இவர்கள் புதிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்வது வழக்கம். இத்தகைய சந்தர்ப்பங்களில் கைவிடப்பட்ட குடும்பத்தை, அந்தத் தாய்தான் உழைத்துக் காப்பாற்றவேண்டியிருந்தது. இவ்வாறு 40 வீதமான குடும்பங்கள் தனித்த ஒரு தாயின் உழைப்பையே நம்பியிருந்தன. லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே நிக்கராகுவாவில்தான் இவ்வீகிதாசாரம் உயர்ந்து காணப்பட்டது. ஆணாதிக்க வாதமும், ஆண்மை வாதமும் (Machista ideology) ஊறிப்போன ஸ்பானிய—கத்தோலிக்க கலாசாரத்தின் கெடுபிடிகளைக்கொண்ட ஒரு நாட்டில் 40 சதவீதமான பெண்கள் தன்னந்தனியராய் உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றுவது வேடிக்கையான விஷயம்தான். ஆனால் இதனால் பல பெண்கள் மோசமான சுரண்டலுக்கும், வறுமைக்கும் ஆளானார்கள். வேறு பலர் விபச்சாரம் போன்ற தொழில்களுக்கும் தள்ளப்பட்டார்கள்.

சர்வாதிகார ஆட்சியில் சட்டமும் ஆண்களுக்கே சாதகமாக இருந்தது. இது பெண்களை மேலும் இழிந்த நிலைக்குத் தள்ளியது. விவசாயத்துறையில் பல கிராமங்களில் பெண்களுக்குத் தனியாக கூலி கொடுப்பதில்லை. பெண்களின் உழைப்புக்கான கூலி ஆண்களினதைவிடக் குறைவாக இருப்பதுமில்லாமல், அதை 'குடும்பச் சம்பளம்' என்பதின் ஒரு பகுதியாக ஆண்களிடமே முதலாளிகள் கொடுத்துவிடுவர். இத்தகைய அப்பட்டமான சுரண்டலின் காரணமாக, பெண்களின் பொருளாதாரச் சுமையும் குடும்பப் பொறுப்பும் இன்னும் பலமடங்கு கூடிவிடுகின்றது.

இத்தகைய நிலைமைகள் AMPRONAC இயக்கத்தைச் சேரும் பெண்களின் வர்க்கச் சார்பையும் நிர்ணயித்தன. இவ்வியக்கத்தில் அடிமட்டத்துப் பெண்களே தீவிரமாக உழைத்தனர் என்பதைப் பார்த்தோம். அதிலும் ஒப்பீட்டளவில் உலக அனுபவம் கூடிய நகர்ப்புறப் பெண்களையும் விட கிராமப்புற விவசாயப் பெண்களே இயக்கத்தில் கூடுதலாக உழைக்க முன்வந்தனர். இதற்குக் காரணம் கிராமப் பெண்கள் மற்றெல்லோரையும்விட மோசமான ஒடுக்குமுறைக்குட்பட்டதாயிருக்கலாம். அதே நேரத்தில் நகர்ப்புறப் பெண்களில், தொழிலாளவர்க்கப் பெண்கள்கூட பெண்கள் பற்றிய நடுத்தர வர்க்கச் சிந்தனைக்கு ஆட்பட்டிருந்தமையினால் கிராமத்துப் பெண்களைப்போல கலாசாரத் தடைகளைத் தூக்கியெறிந்து வருவதில் தயக்கம் காட்டியிருக்கலாம். அடுத்து 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஆண்களைவிடப் பெண்களே கூடிய அளவு புரட்சிகர வேலைகளில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. சர்வாதிகார ஆட்சியின் கொடுமைகளுக்கு ஆண்களும் பெண்களுமாக பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பலியாகினார்கள். இவ்விளைஞர்களின் தாய்மார்கள் பலர் தம் சொந்த அனுபவங்களுக்கூடாகவே புரட்சிமயப்படுத்தப்பட்டு காலப்போக்கில் இயக்கத்திலீடுபட்டிருக்கிறார்கள். தம் பிள்ளைகளைப் பறிகொடுத்து நிற்கும் தாய்மார்கள் ஒவ்வொரு அயலிலும் கிராமத்திலும் காணப்பட்டனர். இதனால் புரட்சிகரமான தாய்மார்கள் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. புரட்சியிலீடுபட்டிருந்த தாய்மார்களுக்கும் புதல்விகளுக்குமிடையில் ஒரு விசேஷ பிணைப்பு ஏற்பட்டது. இதனால் குடும்ப அமைப்புக்களும் உறவுகளும் பெரிதும் மாற்றமடைந்தன.

AMPRONAC என்ற இவ்வியக்கமே புரட்சிக்குப்பின் AMNLAE (லூயிஸா அமான்டா எஸ்பினோசா நிக்கராகுவா பெண்கள் இயக்கம்) எனப் பெயர் பெற்றது. இத்தகையதொரு இயக்கத்தின் முன்னோடியாகவே லூயிஸா அமான்டா எஸ்பினோசா இருந்துள்ளாள். ஒடுக்கப்பட்ட தொழிலாள வர்க்கத்திலிருந்து வந்த லூயிஸாவின் பெயரை நிக்கராகுவப் பெண்கள் தம்மியக்கத்திற்கு சூட்டியமை அவர்களின் தொழிலாள வர்க்கச் சார்பினையும் புரட்சிகர இலட்சியங்களையும் காட்டுகிறது.

லூயிஸா வறிய குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுடைய தாய்க்கு இருபத்தொரு குழந்தைகள் பிறந்து ஆறு குழந்தைகள்தான் மிஞ்சின. அந்த ஆறு பிள்ளைகளில் லூயிஸாதான் கடைசி மகள். லூயிஸா பிறக்கு முன்னமே அவள் தகப்பன் குடும்பத்தை அநாதரவாக விட்டு விட்டுச் சென்று விட்டான். அவள் தாயும் மற்றும் பல நிக்கராகுவப் பெண்களைப் போலவே சிறு கூலி வேலைகளைச் செய்து குடும்பத்தைக் காப்பாற்றினாள்.

லூயிஸா சிறுவயதில் அவளுடைய உறவினரின் தயவில் வாழச் சென்றிருந்தாள். அங்கு அவர்களின் கெடுபிடிகள் தாங்க முடியாமல் வீட்டுக்கே திரும்பி வந்து விட்டாள். தனது ஏழாவது வயதில் மாமாவுக்காக வீதிகளில் பாண் விற்றுத் திரிந்திருக்கிறாள். எழுத, வாசிக்கக் கூடிய படிப்புத்தான் அவளுடையது. பதினான்கு வயதளவில் நிரந்தரமாகவே குடும்பத்தை விட்டுச் செல்வதாக நினைத்துத் திருமணம் செய்தாள். ஆனால் அவளுக்கும் அவளது தாயின் அதே விதிதான். திருமணமுடிந்து, சுயமாக உழைத்துச் சொந்தக் காலில் நிற்கலாம் எனச் சென்றவள் கணவனின் இம்சை தாங்காமல் தாயிடமே வந்திருந்தாள். வாழ்க்கையின் சந்தோஷங்கள், எதிர்பார்ப்புக்கள் எல்லாவற்றையும் தேக்கி வைத்திருக்கும் அவ்விளம் வயதிலேயே லூயிஸாவுக்கு வாழ்க்கை ஒரு கசப்பான அநுபவமாகி விட்டது. சோமோசாவின் அராஜக ஆட்சியில் நாட்டில் வறுமையும் பொருளாதார நெருக்கடியும் உக்கிரமாகவிருந்தன. இதனால் பெண்களே மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். அதுவும் லூயிஸா போன்ற தொழிலாள வர்க்கப் பெண்கள் — இளவயதில் கூட வாழ்க்கை பற்றி எவ்வித கனவுகளுமின்றியே வளர்ந்து வந்தனர்.

லூயிஸா FSLN இல் அறுபதுகளின் கடைசிப் பகுதியில் சேர்ந்திருக்க வேண்டும். அந்நேரத்தில் இயக்கம் மிகக் கஷ்டமானதொரு கட்டத்திற்கூடாகச் சென்று கொண்டிருந்தது. சர்வாதிகார ஆட்சியும் முன்னெப்பொழுதையும் விடப் பலம் கொண்டு காணப்பட்டது. புரட்சிகர இயக்கங்கள் சிதறுண்டிருந்தன. அப்போதுதான் FSLN தன் அமைப்புக்களை மீளமைக்கும் பணியில் இறங்கியிருந்தது. ஆள் சேர்ப்பதிலும் ஈடுபட்டிருந்தது. சேர்க்கப்பட்ட ஆட்களை அரசியல் மயப்படுத்தி அவர்களுக்குப் புரட்சிகர பிரக்ஞையூட்ட வேண்டியிருந்தது.

இக்கால கட்டங்களில் இயக்கத்தில் பெண்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில்தான் காணப்பட்டனர். இயக்கத்தில் சேர்வதற்கும், இயங்குவதற்கும் ஆண்களை விட அதிகமான, பிரத்தியேகமான பிரச்சினைகளை பெண்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இயக்கத்தில் ஒரு பெண் அங்கத்தவர் ஆவதற்கு வாழ்க்கையில் பல விஷயங்களைத் தியாகம் செய்ய வேண்டியிருந்தது.

அக்கால கட்டத்தில் இயக்கம் ஈடுபட்டிருந்த வேலைகளின் தன்மையாலோ என்னவோ (ஆண்

www.eelamview.com



"ஒருமுறை லூயிஸா மலையிலிருந்து கீழிறங்கி வரும் பொழுது மூன்று காவற்படையினர் அவளைத் தடுத்து நிறுத்தினர். அன்றைக்கு அவள் ஒரு தாதி போல உடையணிந்திருந்தாள். அவளை அவர்கள் உள்ளே கூட்டிச் சென்ற பொழுது அவர்களில் ஒருவன் அவளைக் கற்பழிக்க எண்ணினான். அந்நோக்கத்துடன் அவன் லூயிஸாவை ஆற்றங்கரைப் பக்கம் கூட்டிச் சென்றான். லூயிஸாவும் அவனின் நோக்கங்களுக்கு இசைவது போல் காட்டி பின்பு அந்த ஆற்றங்கரையிலேயே அவனைக் கொன்று போட்டாள். பிறகு எப்படியோ தப்பித்துக் கொண்டாள். அப்படிப்பட்ட தைரியசாலி அவள். இப்படியே அவள் எத்தனையோ முறை மயிரிழையில் தப்பியிருக்கிறாள்."

சேகரிப்பது, பிரசாரம் செய்வது போன்ற வேலைகள்) இயக்கத்தில் சேர்ந்த பெண்கள் அநேகர் மாணவிகளாயிருந்தனர். பெண்கள் இராணுவ வேலைகளில் பிற்காலத்திலேயே ஈடுபட்டனர். பெண்களே மிகக் குறைவென்றால், தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் இன்னும் குறைவு. இத்தகைய பெண்களில் லூயிஸாவும் ஒருத்தி. ஆரம்பத்தில் லூயிஸா தலைமறைவாக இருந்த தோழருக்கு புகலிடம் கொடுத்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருந்தாள்.

லூயிஸா தனது தாயின் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்று இன்னுமொரு வயது வந்த பெண்ணின் வீட்டில் தங்கி வந்தாள். கார்மன் என்ற இந்தப் பெண் நடத்திய சிற்றுண்டிக் கடையில்தான் FSLN தோழர்கள் அடிக்கடி சந்தித்து வந்தார்கள். FSLN இன் முக்கிய தலைவர்கள் கூட அந்தக் கடையில்தான் சந்தித்து வந்தனர். இத்தகைய புரட்சிகரச் சூழ்நிலை நிச்சயம் அவளைப் பாதித்திருக்க வேண்டும்.

லூயிஸாவுக்கு இயக்கத்தின் மேலிருந்த பற்று முழுமையானது. FSLN இல் ஆண்களுக்கு எவ்வளவு உரிமை இருந்ததோ அவ்வளவு உரிமை பெண்களுக்கும் உண்டு என்ற ஆழமானதொரு உணர்வுடன் அவள் செயற்பட்டு வந்தாள். அதுவும் இயக்கத்தில் பெண்கள் மிகவும் குறைவாக இருந்த காலத்தில் அவளுடைய இந்த உறுதியும் பற்றும் விசேஷமானதுதான். லூயிஸாவின் இத்தகைய விசேஷ அம்சங்களை எடுத்துக் காட்டும் சம்பவங்கள் பல அவளுடைய வாழ்க்கையில் சம்பவித்திருக்கின்றன. ஒரு முறை அவளும் அவளுடைய தோழர்களும் ஒளிந்திருந்த ஒரு வீட்டை அரச படையினர் அடையாளங்கண்டுவிட்டனர். லூயிஸாவுடன் வாழ்ந்த ஒரு பெண்மணி இந்நிகழ்ச்சியைப் பற்றிப் பின் வருமாறு விபரிக்கிறார்:

"...தோழர்கள் எல்லோரும் ஒருவாறு வீட்டை விட்டு வெளியேறி விட்டனர். ஆனால் அரச படையினர் தொடர்ந்து அவ்வீட்டைச் சுற்றி வளைக்கக் காவல் புரிகின்றனர். அன்றிரவு லூயிஸாவோ தனியாகத் திரும்பி வந்து வீட்டின் பின் பக்கத்து ஜன்னல் ஒன்றால் ஏறி உள்ளே குதித்து அவர்கள் விட்டுச்சென்ற பொருள்கள் யாவற்றையும் மீட்டாள். அதாவது சில ஆயுதங்களும் ஒரு தையல் மெஷினும் தான். அவற்றை வெளியே எடுத்து வந்து ஆற்றுப் படுகையில் ஒளித்து வைத்து விட்டாள். இரண்டு நாட்களுக்குப் பின் ஒரு காரில் வந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டாள். கார் நிறைய சாமான்கள். ஒரு கட்டத்தில் அங்கு நின்ற அரச படையினருடன் அவர்கள் சந்தேகங் கொள்ளாதவாறு சிரித்துப் பேசிய படியே, காரில் சாமான்களை ஏற்றிப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து விட்டாள். அவள் அவ்வளவு உயிராபத்தின் மத்தியிலும் அப்பொருள்களை மீட்கும் அளவிற்கு அப்பொருள்கள் பெறுமதி வாய்ந்தவை அல்ல என்பதுதான் மற்றவர்கள் கருத்து. அவளோ அப்படி நினைக்கவில்லை.

* * * * *

1970-ல் தலைநகரில் FSLN இன் பல புரட்சிகரத் தோழர்கள் அரச படையினரால் கொல்லப்பட்டனர். அவர்களில் லூயிஸாவின் நெருங்கிய சிநேகிதன் மோரிஸியோவும் ஒருவன். இந்த நிகழ்ச்சி அவளை உலுக்கியிருக்க வேண்டும்.

லூயிஸாவின் மிக நெருங்கிய தோழி ஒருத்தி இந்த நிகழ்ச்சியைப் பின் வருமாறு நினைவு கூர்கிறார்.

"...FSLN தோழர்கள் இறந்த பொழுது லூயிஸா தான் எவ்வளவு சோகமாக இருந்தாள். அவளுக்கும் இந்த மோரிஸியோவுக்குமிடையில் காதலுறவு இருந்திருக்க வேண்டும்.... ஆனால் அவள் சோகமாயிருந்தாள் என்பதுடன் கூட இன்னுமொரு விஷயமும் நினைவுக்கு வருகிறது. அவள் நோய்வாய்ப்பட்டு இருந்தாள். அவளுக்கு என்ன சுகவீனம் எனத் தெரியாது. ஆனால் என் வீட்டிற்கு வரு முன்னமே அவள் நோய்வாய்ப்பட்டிருந்தாள். ஒருவேளை அதனால் தான் அவள் அவ்வளவு அமைதியாயிருந்திருக்க வேண்டும்."

உண்மையில் சோகமாயும், அமைதியாயும் இருப்பது லூயிஸாவின் இயல்பல்ல. எத்தகையதொரு துணிச்சலான போராளியாயிருப்பினும், வாழ்க்கையின் அடிபாடுகளின் காரணமாக ஒரு கணம் மனங்கலங்கி எவரும் நிற்கக் கூடும். மரணம், நோய் மற்றெவரையும் போல லூயிஸாவையும் பாதித்திருக்கத்தான் செய்கிறது. ஆனால் இதில் முக்கியமான விஷயம் என்னவெனில் அவள் தனது தனிப்பட்ட துயரங்கள், பிரச்சினைகளையும் மேவி உற்சாகத்தோடு தொடர்ந்து இயக்க வேலைகளில் தீவிர ஈடுபாடு காட்டியதுதான். லூயிஸாவுடன் கடைசியில் இறந்து போன என்ரிக் என்ற தோழரின் மனைவியான குளோரியா கம்போஸ் கூறுகிறார்:

"...கடைசி இரு மாதங்களும் நாம் ஒரு வீட்டில் இருந்தோம். லூயிஸா எல்லாவகையிலும் ஒரு நல்ல தோழியாக இருந்தாள். சந்தோஷமான ஒரு பெண் ஆடுவது, பாடுவது என்றால் அவளுக்கு நன்கு பிடிக்கும்..."

அத்துடன் ஒருசில வேலைகளில் அவை எவ்வளவுதான் கடினமானவை எனினும் ஒருவகை ஓர்மத்துடனும் கடும் முனைப்புடனும் ஈடுபட்டிருக்கிறாள். புரட்சிகர சிந்தனைக்கும் வேலைகளுக்குமே தன்னை மேலும் மேலும் சித்தாந்த ரீதியாக தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்றதொரு கடமையுணர்வு அவளிடம் இருந்துள்ளது. கல்வி வாசனை அதிகம் இல்லாதவள். இருந்தும் இடையறாது புதிய விஷயங்களை கற்றுக்கொள்ள கஷ்டப்பட்டிருக்கிறாள். இது பற்றி குளோரியா கம்போஸ் கூறினார்:

"...நிறையப் புத்தகம் படிப்பாள். புதிதுபுதிதாகக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற பேராவல் அவளுக்கு. தணியாத ஓர் ஆசையுடன் இடைவிடாது படித்துக்கொண்டேயிருப்பாள்..."

லூயிஸா வீட்டை விட்டுவிட்டுப் போய் முழுநேரமும் இயக்க வேலைகளில் ஈடுபட்டிருந்த போதும்கூட இடையிடையே வீட்டுக்குப் போய்த் தன் தாயைச் சந்தித்திருக்கிறாள். ஆனால் அவள் குடும்பத்தினருக்கு அவளின் ஈடுபாடுகள்பற்றிப் பெரிதாக எதுவும் தெரிந்திருக்கவில்லை. லூயிஸாவின் தாய் தனது மகளைப் பற்றிப் பின்வருமாறு நினைவு கூர்கிறார்:

லூயிஸாவை எங்களில் யாருக்குமே நன்கு தெரியாது. ஆனால் இப்புரட்சிகரப் போராளி நிஜமான ஒரு கனவு போல எங்கள் மானசீகங்களில் வாழ்கிறாள் என்று லூயிஸாவுடன் பழகிய ஒரு தோழர் அவளை நினைவு கூர்கிறார்.

"அவர்கள் எங்களுக்குப் படிப்பதற்கு நிறையப் புத்தகங்கள் கொண்டு வந்து தருவார்கள். அந்தப் புத்தகங்கள் சாதாரணமாகப் படித்து விளங்குவதற்கு மிகவும் கஷ்டமானவை. லூயிஸாவோ முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை ஒவ்வொரு வரியாகக் கஷ்டப்பட்டுப் படிப்பாள். அவளுக்கு இத்தகைய புத்தகங்களை விளங்கிக் கொள்வது மிகவும் கஷ்டமாகத்தான் இருந்திருக்கும். அவள் வெகு குறைவாகத் தான் படித்திருந்தாள். ஆனால் தன் கல்வித் தரத்தை உயர்த்த அவள் அரும்பாடுபடுவாள்."

—லூயிஸாவின் தோழி ஒருத்தியின் நினைவிலிருந்து.

"சிற்றுண்டிக் கடை வைத்திருக்கும் கார்மென் என்ற பெண்மணியின் வீட்டுக்குச் சாதாரணமாக இளம்பிள்ளைகள் வந்து போவார்கள். எனது மகள் லூயிஸாவும் அந்தப் பிள்ளைகளுடன் தான் சேர்ந்து திரிகிறாள் என்றே நான் நினைத்தேன். ஆனால் அவள் ஒருநாளும் ஒன்றையும் என்னிடம் சொன்னது கிடையாது. ஒரு நாள் நான் அவளைத் தனியே அழைத்துக் கேட்டேன்.

"மகளே! உனக்கு என்ன பிரச்சினை என்று எனக்குச் சொல்லு"

அவளை நோக்கி இந்தக் கேள்வியைக் கேட்கையில் எனக்கு அழுகையாயிருந்தது.

அவள் எனக்குக் கிட்டத்தில் வந்து முழங்காலில் அமர்ந்தாள்.

"அம்மா, நீங்கள் அழவேண்டாம். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்கிறேன். ஆனால், நீங்கள் என்னைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது. நீங்கள் அப்படி செய்யமாட்டீர்கள் என்று எனக்குச் சத்தியம் செய்து தரவேண்டும்..."

"யாரிடம் காட்டிக்கொடுப்பது?" என நான் கேட்டேன்.

முழங்கால்களில் நின்றுகொண்டிருந்த அவளை எழும்பச் சொன்னேன். அதற்குப் பின் தான் ஈடுபட்டிருக்கும் இயக்க வேலைகளை எனக்குச் சொன்னாள்.

'கவலைப்பட வேண்டாம், அம்மா! நான் என்னைப் பார்த்துக் கொள்கிறேன்..." என்று கூறி என்னைத் தேற்றினாள்.

கடைசி முறையாக அவள் வீட்டிற்கு வந்தபோது அவள் தன் சகோதரிகளைக் கட்டியணைத்தாள். தான் கொஞ்ச காலத்திற்கு ஊரைவிட்டுப் போகப் போவதாகச் சொன்னாள்.

நான் அவளை ஆசிகூறி அனுப்பினேன்.

அவள் போய்விட்டாள்.

ஒரு மாதத்திற்குப்பின் பத்திரிகைகளில் அந்தப் படம் வந்தது.

அந்தப் படத்தில்—

ஓர் இளம்பெண்ணும் ஓர் இளைஞனும் காணப்பட்டனர்.

அவர்கள் இறந்துகிடந்தனர்.

இல்லை—

சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

அந்தப் படத்தில் இருந்த லூயிஸாவை அவளது தாய் அன்று அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஆனால், சில நாட்களுக்குப்பின் லூயிஸாவின் இயக்கத் தோழரிடமிருந்து வந்த செய்திதான் அவள் மரணத்தைக் குடும்பத்திற்கு அறிவிக்கிறது. லூயிஸாவை அடக்கம் பண்ணுவதற்குக்கூட அந்தக் குடும்பத்திடம் அப்போது கையில் காசிருக்கவில்லை.

* * * * *

லூயிஸாவின் மரணம் பற்றி யாரிடமுமே திட்டவட்டமான தகவல் கிடையாது. காரணம் அவளுடனிருந்த ஒரேயொரு போராளியும் மரணமடைந்துவிட்டான். லூயிஸாவும் அப்பிரதேசத்திற்கு பொறுப்பாகவிருந்த என்ரீக் லொரென்டேயும், அவன் மனைவி குளோரியாவும் மேலும் சில தோழர்களும் ஒரு வீட்டிலிருக்கும்பொழுது, அந்தச் சுற்று வட்டாரத்தில் தகவல் கிடைத்த அரசப் படையினர் வட்டமிடுவதாக இவர்களுக்கு செய்தி கிடைக்கிறது. லூயிஸாவும் என்ரீக்கும் மற்ற தோழர்களைப் பாதுகாப்பாக அனுப்பிவிட்டு வெளிக் கிளம்புகின்றனர். காட்டிக் கொடுப்பவன் ஒருவனின் செய்தி கிடைத்தது. காவல்படையினர் அவர்களை சுற்றி வளைக்கின்றனர். என்ரீக் சூடுபட்டு வீழ்ந்தவுடன் அவனுடைய பிஸ்டலை எடுத்து லூயிஸா சுடத் தொடங்குகிறாள். என்ரீக்கின் வேண்டுகோளின்படி அவனை லூயிஸாவே சுட்டாள் எனவும் ஒரு தகவலுள்ளது. ஆனால் இரு விடுதலை வீரர்களும் கடைசி வரை களத்தில் போராடிக் கொண்டே வீழ்கிறார்கள்.

அரசபடைகளின் கரங்களில் பிடிபடாமல் இறுதிவரை — போராடி மரணமடைந்த வீரமகள் லூயிஸா.

## தென் ஆபிரிக்காவில் பதினைந்து ஆண்டுகள் சிறையில் வாடிய பெண் போராளி

நிறவெறி தலைவிரித்தாடும் தென் ஆபிரிக்காவில் மிக நீண்டகாலச் சிறைவாசத்தை அனுபவித்த பெண் அரசியல் கைதி டொரத்தி நயெம்பே DOROTHY ஆவார். தென் ஆபிரிக்காவின் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் 1969ம் ஆண்டு கைது செய்யப்பட்ட டொரத்தி நயெம்பே 15 ஆண்டு காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு இவ்வாண்டு தான் விடுதலை பெற்றுள்ளார்.

39 வயதில் சிறைக்குள் புகுந்த டொரத்தி சிறைவாசம் அனுபவித்து வெளியுலகைத் திரும்பவும் பார்க்கும்போது 54 வயதைத் தாண்டி விட்டார்.

1930ல் நேட்டாலில் பிறந்த டொரத்தி தனது 22வது வயதிலேயே ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸில் (ANC) தன்னை இணைத்துக்கொண்டார். அப்போதே தென் ஆபிரிக்காவின் அநீதியான சட்டங்களுக்கு எதிரான கிளர்ச்சிகர இயக்கங்களில் தீவிரமான ஈடுபாடுகொண்டார். இதற்காக இரண்டு தடவைகள் குறுகியகாலச் சிறைவாசத்தையும் அனுபவித்தார். வெகு விரைவில் தென் ஆபிரிக்கப் பெண்கள் சம்மேளனத்தின் நேட்டால் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

டொரத்தி ஓய்வு ஒழிச்சல் இன்றி அயராது உழைக்கக் கூடியவர். நேட்டால் முழுவதும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் பெண்கள் கிளைகளை அமைத்தார். வெள்ளை நிறவெறி ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிராமப்புறத்திலும் நகர்ப்புறத்திலும் பெண்கள் இயக்கங்களைக் கட்டி எழுப்பினார். திரான்ஸ்வாலில் கறுப்பு இனச் சிறுவர்களைப் பண்ணைகளில் பயன்படுத்தி விளைவித்த உருளைக்கிழங்கினைப் பகிஷ்கரித்து மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சிகளில் டொரத்தி பெரும்பங்கு வகித்தார்.




1956 டிசெம்பரில் தேசவிரோத விசாரணை வழக்கிற்காகக் கைது செய்யப்பட்டு குற்றஞ் சுமத்தப்பட்ட 18 பெண்மணிகளில் டொரத்தியும் ஒருவராவார். ஆனால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

ஆனால் 1960ல் அவசரகால சட்டத்தின் கீழ் ஐந்து மாதச் சிறைவாசத்தையும் 1963ல் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் இயக்கத்தின் தீவிர நடவடிக்கைகளுக்காக மூன்று ஆண்டுகாலச் சிறைவாசத்தையும் அனுபவித்தார். 1963ல் டொரத்திமீது தென் ஆபிரிக்க அரசு தடைவிதித்தது. சமூகத்துடனான சகல தொடர்புகளையும் துண்டிக்கும் இத் தடைச் சட்டம் வீட்டிலேயே தனிமைச் சிறையை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகும்.

1968ல் டொரத்தி நயெம்பே கெரில்லாப் போராளிகளுக்குப் புகலிடம் வழங்கியமைக்காக பயங்கரவாதச் சட்டத்தின் கீழும் கம்யூனிஸ ஒழிப்புச் சட்டத்தின் கீழும் குற்றம் சுமத்தப்பட்டார். இந்த வழக்கு டொரத்தி நயெம்பேயை 15 ஆண்டு காலம் கொடிய சிறைக்குள் தள்ளியது.

சிறைக்கூடத்திற்குள்ளும் டொரத்தி நயெம்பே மனித உரிமைகள் மீறலுக்கு எதிராகச் செயற்பட்டார். சிறைக் கட்டுப்பாடுகளை நிராகரித்து உண்ணாவிரதமும் மேற்கொண்டார்.

விடுதலைப் போராளிகளின் நெஞ்சிலெல்லாம் நிறைந்திருக்கும் டொரத்தி நயெம்பே 15 ஆண்டு காலச் சிறைவாசத்தை அனுபவித்து விடுதலை பெற்று வெளியே வரும் இச்சந்தர்ப்பத்தில் உலகெங்கிலும் உள்ள சகல புரட்சிகர முற்போக்கு சக்திகளுடன் ஒன்றிணைந்து அவரை வாழ்த்தி வரவேற்பதில் விடுதலைப் புலிகள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

www.eelamview.com

# இராசரத்தினம் டயரி

**1973 ஜனவரி 13, சனி**

அலுவலகத்திற்குச் சென்றேன். நடவடிக்கைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர்களுக்குக் கறுத்தக் கொடி காட்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பெப்ரவரி 10, சனி**

திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் தலைவர் பதவிக்குரிய நிரமனம் பற்றிக் கதைத்து அவரது பெயரை முன் மொழிந்த கடிதத்தைக் காண்பித்தேன். அவரும் அதை ஏற்றுக் கொண்டார்---எனது தமிழ்நாட்டுப் பிரயாணத்தைப் பற்றிக் கூறினேன்.........

**ஏப்ரல் 9, திங்கள்**

கலணியில் தங்கியிருந்தேன். நானும் மைத்துனரும் சென்று திரு. அடியாரைச் சந்தித்தோம். புதிய அணியின் தலைவராக என்னை இருக்குமாறு கேட்டுக் கொண்டார். நானும் இசைந்தேன். தொடர் கட்டுரை எழுதுமாறு கேட்டுக் கொண்டார்.

**ஏப்ரல் 21, சனி**

.......எனக்குத் தொய்வு வந்தது. தாயக நண்பர்களிடமிருந்து இன்று வரையும் எவ்வித பொருளுதவியும் கிடைக்காததினால் அவர்களை நினைத்து வேதனைப்பட்டேன். எனது இனம் சுய உரிமை பெற வேண்டுமாகில் பலாத்காரப் புரட்சிதான் ஒரே வழி. இதற்காக எனது உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தேன். இவ்விஷயத்தில் எனது மனம் உறுதியடைந்து கொண்டு வருகின்றது.

**ஏப்ரல் 22, ஞாயிறு**

பொருள் இல்லாததினால் ......... எனது வெறுமையான நிலையையும் அந்நிய நாட்டில் பிறரின் தயவில் வாழ வேண்டி ஏற்பட்ட இழிநிலையையும் உடன் வாழ்ந்த நண்பர்களின் உதாசீனத்தையும் எண்ணி வெறுப்படைந்தேன்.

**ஏப்ரல், 23 திங்கள்**

எனது தொடர் கட்டுரைகளை ஒரு புத்தகமாக வெளியிடலாமென்று திரு. இரா. சனார்த்தனம் எனக்கு ஆலோசனை கூறினார். நானும் அதை ஆமோதித்தேன். எல்லாளனின் பெயரில் பத்திரிகை வெளியிடவும் திட்டமிட்டேன்....

**ஏப்ரல் 24, செவ்வாய்**

மகேசனுக்கும், மிகவும் வேதனையுடனும், வெறுப்புடனும் கடிதம் எழுதினேன். நண்பர்களால் ஏமாற்றப்பட்டதையும், தலைவர்களின் கோழைத்தனத்தையும் உதாசீனத்தையும் கண்டித்துக் கடிதம் எழுதினேன். இரவு முழுவதும் எனது நிலையை எண்ணியெண்ணிக் கண்ணீர் விட்டேன்.

வருங்காலம் எப்படி அமையப் போகின்றது. எனது குழந்தைகளை எப்பொழுது பார்க்கப் போகின்றேன்?

**ஏப்ரல் 25, புதன்**

தலைமுடி வெட்டுவித்தேன். சோவியத் தூதரகத்தில் நடைபெற்ற சொற்பொழிவுக்குச் சென்றேன். சிறையில் அடைபட்டுக் கிடக்கும் தொண்டர்கள் எவ்வாறு விடுதலை பெறுவர்? தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கு எங்கள் மீது அணுவளவும் அனுதாபமில்லை. இலங்கையிலுள்ள தனவந்தர்களுக்கும்... ..... நான் தனி மனிதனாக இங்கிருந்து என்ன செய்வது? செலவுக்கும் பணமில்லை. ஐயோ 'தமிழினமே'.

**ஏப்ரல் 27, வெள்ளி**

திருச்சியிலிருந்து பணம் கிடைத்தது. எனது நண்பர்கள் எவரிடமிருந்தும் இன்றும் ஒரு கடிதமும் வரவில்லை. இலங்கைக்குத் திரும்பிச் செல்லவே எண்ணினேன். சிறையிலிருக்கும் தீரர்களின் குடும்பங்களைப் பற்றி எண்ணி வருந்தினேன். அவர்களின் குடும்பங்களின் மாதாந்த செலவுகளுக்குப் பணம் கொடுப்பதற்கு யார் முன்வரப் போகிறார்கள்?

**ஏப்ரல் 29, ஞாயிறு**

... ... ... Rebels என்ற நூலை வாசித்தேன். அதைப் போல் ஒரு இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் உதயமாகியது.

**ஏப்ரல் 30, திங்கள்**

... ... ... திருமதி இந்திரா காந்தி பெரியவரைப் பார்க்க மறுத்ததைப் பற்றிய செய்தி இன்றைய பத்திரிகைகளில் வந்ததை அறிந்ததும் வேதனைப் பட்டேன். எமது போராட்டத்திற்கு ஆதரவு தருவதற்கு ஒரு நாடும் முன்வர மாட்டாது. தமிழ்நாடு ஆட்சியிலிருப்பவர்களும் அசிரத்தை காட்டுகின்றார்கள்.

**மே 3, வியாழன்**

சீனத் தெருவில் 300 - எடுத்தேன். இன்று மனதிற்கு சற்று உற்சாகமாக இருந்தது.

**மே 4, வெள்ளி**

வீட்டில் தங்கியிருந்து இயக்க அமைப்பு சம்பந்தமான நூல்களைப் படித்தேன். இலங்கையின் பிரச்சினைக்கு தனிச் சங்கம் அமைப்பதற்கு ஒரு ஆலோசனைக் கூட்டம் 9-5-73 மாலை 6-00 மணிக்கு கவிதா ஓட்டலில் வைப்பதற்குத் திரு. கண்ணதாசன் அவர்கள் இசைவு தந்தார்கள். 50 PC வாங்கினேன்.

**மே 6, ஞாயிறு**

வீட்டிலேயே தங்கியிருந்தேன். 9-ம் திகதி கூட்டத்திற்குரிய அழைப்புகளை அனுப்பினேன். ஐம்பதினாயிரம் தமிழ் இளைஞர்களைக் கொண்டு விடுதலைப் படை அமைக்க வேண்டுமெனத் தீர்மானித்தேன். இவர்களின் உடைக்கு ஒரு நிறம். சினிமா காட்டுவதைத் தடை செய்ய வேண்டும். மது விற்பனையை நிறுத்த வேண்டும்.

**மே 7, திங்கள்**

துணைவியிடமிருந்து கடிதங்கள் கிடைத்தன. ஈழத்தில் ஆயுதப் புரட்சியை தமிழர்களால் ஏற்படுத்தாது விட்டால் தமது இனம் அழிந்து விடும். இதற்குரிய வழி வகைகளை வகுப்பதற்காக மற்றைய நாடுகளில் நடைபெற்ற இயக்கங்களின் வரலாறுகளைக் கவனமாக எடுத்துப் படிக்கின்றேன்.

**மே 9, புதன்**

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு சங்கம் அமைப்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. 15 அன்பர்கள் வந்திருந்தார்கள்.

**மே 12, சனி**

இன விடுதலையின் தலைவிதியைப் பற்றியும் தமிழர்களின் உதாசீனத்தையும் எண்ணியெண்ணி அதிகமாக வருந்தியதால் தொய்வு கடுமையாக இருந்தது. Dr. இராஜேந்திரன் என்னை வந்து சந்தித்துப் பகலுணவிற்கு அழைத்துச் சென்றார். தொய்விற்கு மருந்து கொண்டு வந்து தருவதாகக் கூறினார். நற்சோதியை சந்தித்தேன். திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக ஒரு மனதாய் 5-5-73 தொடக்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக Dr. K. இராஜேந்திரன் எனக்கின்று கூறினார்.

**மே 16, புதன்**

தொய்வும், வயிற்று வலியும் இருந்தது. தனிமையில் வேதனையை அனுபவித்தேன். எழுந்து நடக்க முடியாது கஷ்டப்பட்டேன். ஜனாவின் தாயார் எனக்கு ருசியான உணவு சமைத்துத் தந்தார். என்றால் சாப்பிட முடியவில்லை.

**மே 17, வியாழன்**

உடல்நிலை கொஞ்சம் குணமடைந்திருந்தது. யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில் சரித்திர முக்கியத்துவமான தீர்மானம் எடுக்கப்பட்டது.

1. இலங்கையில் ஒரு சுதந்திர தமிழ்நாடு அமைப்பதை கொள்கையளவில் ஏற்கப்பட்டது.
2. அரசமைப்புச் சட்டத்தை வகுப்பதற்கு ஒரு உபகுழு நியமிக்கப்பட்டது.

**மே 22, செவ்வாய்**

சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவரகத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன், கறுப்புக் கொடியும் திரு. ஜனார்த்தனம், மணவைத்தம்பி ஆகியோர்களால் உயர்த்தப்பட்டன. மாலைமுரசு பத்திரிகையில் இச்செய்தி பிரசுரிக்கப்பட்டன.

**ஜூன் 4, திங்கள்**

பச்சையப்பன் கல்லூரியில் விண்ணப்பங்கள் எடுத்துக் காண்டீபனுக்கும், ஜெயக்குமாருக்கும் அனுப்பி வைத்தேன். எனக்கும் தொய்வும், காய்ச்சலும் இருந்தது. இரவு பஸ்ஸில் திருச்சிக்குச் சென்றேன்.

**ஜூன் 10, ஞாயிறு**

கவிஞர் காசி ஆனந்தன் சிறையில் அடைக்கப்பட்டு இன்றுடன் ஒரு ஆண்டு பூர்த்தியாகின்றது.

**ஜூன் 16, சனி**

காண்டீபனின் விண்ணப்பப்படிவம் இன்று கிடைத்ததும் அதை பச்சையப்பன் கல்லூரியில் கொண்டு போய்க் கொடுத்தேன். ரசீது இல 16778 Application No. 5680...

**ஜூன் 29, வெள்ளி**

திருமதி வ. ந. நவரத்தினம் அவர்களது மகன், காண்டீபன், நடேஸ் ஆகியோர் எனது வீட்டிற்கு வந்தனர். அவர்களை சாரதநிவாசில் தங்க வைத்தேன். திரு. நவத்தின் மகன் சிறீ நமச்சிவாயத்தை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ப்பதற்காக திரு. ஜனாவும் நானும் திரு. கபாலி Trust-board உறுப்பினர் அவர்களிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கிக் கொண்டு போய்க் கல்லூரியில் சேர்த்தோம். காண்டீபனையும் கல்லூரியில் சேர்த்தோம்.

**ஜூன் 30, சனி**

அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஆண்டுக் கூட்டம் வவுனியாவில். திருமதி நவம், சிறீ நமச்சிவாயம் பச்சையப்பா கல்லூரிக்குச் சென்றோம். School Leaving Certificate இல்லாதபடியால் கல் ரியில் அவரைச் சேர்க்க முடியவில்லை.

**ஆகஸ்ட் 11, சனி**

கவிஞர் கண்ணதாசன் வீட்டு வாசலில் காலை 10-00 மணியளவில் நிற்கும் பொழுது திரு. செ. இராசதுரையும் அங்கு வந்தார். ஆனால் அவர் என்னைக் கண்டு விட்டு மறுபக்கம் திரும்பிக் கவிஞரின் வீட்டுக்குள் சென்று விட்டார். நான் ஆச்சரியமடைந்தேன்.

**ஆகஸ்ட் 23, வியாழன்**




நானும் திரு. ஜனாவும் எழுதிய நூலிற்கு அட்டைப் படம் வரைவித்து எடுத்தோம். இதில் வட மத்திய மாகாணத்தையும் உள்ளடக்கிய ஈழத் தமிழகத்தை வரைவித்தோம். இப்படம் பரணி ஆர்ட்சின் உரிமையாளரால் வரைந்து தரப்பட்டது. இரவு 11-00 மணியளவில்தான் படம் எமது கைக்குக் கிடைத்தது. "மீண்டும் எரிகிறது இலங்கை" என்னும் நாடகத்தை திரு. ஜனாவும் 'இலங்கைத் தமிழர் இன்னல் தீருமா' என்னும் பகுதியை நானும் எழுதினோம்.

**செப்டம்பர் 20, வியாழன்**


எனது நிதிநிலைமை பாதிக்கப்பட்டுள்ளதால் இனிமேல் இலங்கைத் தமிழர் விஷயமாக இங்கு ஒரு நடவடிக்கையும் எடுப்பதில்லையென நான் தீர்மானித்திருப்பதாக மகேசனுக்கு விரிவான கடிதம் எழுதினேன். பென்ஷன் படிவம் திரு. துரைராஜாவின் பெயரில் அனுப்பினேன். திருமதி யோகநாதனுக்கும் கடிதம் எழுதினேன். விமலா, யாழினி ஆகியோரைச் சந்தித்தேன்.



தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசாரம் மிக்க இத்தொண்டன் ஆறுமுகம் தொடங்கி செல்லத்துரை நெருப்பினில் பசியால் துடித்த வரலாறு பரிதாப மரணம். இவர் மறைந்ததும் 'தேசாபி' என்று வர்ணித்து இவரது உடலின் மீது உதய சூரியன் கொடியைப் போர்த்தி கூட்டணி அ ர சி ய ல் வியாபாரம் நடத்தியது. இந்த வழி கூட்டணியால் வஞ்சிக்கப்பட்ட ஒரு தொண்டனின் நெஞ்சின் நெருப்பு.







# ஈழத்தில் இனப்படுகொலை



வல்வெட்டித்துறையில் பீரங்கி தாக்குதலால் நாசமாக்கப் பட்ட வீடுகளையும் இராணுவத் தின் அழிவு நடவடிக்கைகளை யும் இங்கே காண்கிறீர்கள்.







www.eelamview.com

# ஆனந்த்

தோற்றம்: 25-1-64

மறைவு: 15-7-83

1983ம் ஆண்டு ஜூலை மாதம் 15ம் தேதி.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய—இளம் கெரில்லா வீரன் ஆனந்த் என்றும் அருள்நாதன் உலகிற்குப் பிரகடனப்படுத்தப்பட்டான்.

பீசாலை மண்ணிலே சுற்றி வளைத்துக்கொண்ட சிங்கள—இராணுவக் கூலிப் படைகளுடன் சாகும்வரை துப்பாக்கி ஏந்திப் போராடிய வேங்கைதான் அருள்நாதன்.

நெஞ்சில் வழியும் ரத்தத்தோடு "என்னைச்சுடடா, சுடு" என்று சீலன் பிறப்பித்த கட்டளையை ஏற்றுப் பக்கத்திலே நின்ற மற்றுமொரு கெரில்லா வீரனின் துப்பாக்கிச் சன்னங்கள் சீலனின் தலையிலே பாய்வதைப் பார்க்கிறான் ஆனந்த். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் சிங்களக் கூலிகளின் துப்பாக்கிச் சன்னங்கள் ஆனந்தையும் தரையிலே வீழ்த்துகின்றன.

சீலனே அந்த கெரில்லாப் படைத்தலைவன்; அரசபடையால் வலைவீசித்தேடப்படுபவன். சாவகச்சேரி பொலிஸ் நிலையச் சம்பவத்தில் சீலனின் தலைமையிலே அந்த கெரில்லாத் தாக்குதல் நடைபெற்றது என்பதை சிங்களக் கூலிப் படைகள் தெரிந்து வைத்திருந்தன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த அங்கத்தவன். சிங்களக் கூலிகளின் கரங்களில் அந்தக் காளை பிடிபடவே முடியாது.

சீலனுக்குத் தன்னை மாய்த்துக் கொள்ளும் மனப்பக்குவம் சித்திப்பதற்கு அநுபவம் துணை புரிந்திருக்க வேண்டும்.

ஆனால், இயக்கத்தில் சேர்ந்து ஆயுதப் பயிற்சி பெற்று ஏழு மாதங்கள் கூட நிரம்பாத நிலையில் இயக்க ரகசியத்தைக் காத்துக் கொள்வதற்குத் தன்னையும் சுட்டு விடுமாறு சகவீரனைப் பணித்த ஆனந்தின் இலட்சியத் தூய்மை நம்மைச் சிலிர்ப்படையச் செய்கிறது.

விடுதலைப் புலிகளின் புரட்சிகர ஆயுதப் பாதையில் நம்பிக்கையோடும் உறுதியோடும் கால் பதித்த அந்த இளைஞன் எத்தனையோ யுத்த களங்களைக் காண ஆசைப்பட்டிருப்பான். ஆனால், அந்தச் சாதனைகளை எல்லாம் செயலில் காட்ட அந்த வீரமகனின் சின்ன ஆயுள் இடம் கொடுக்கவில்லை. பத்தொன்பது வயதிற்குள்ளேயே ஆனந்த் சாவை அணைத்துக்கொள்ள நேர்ந்தது துரதிஷ்டமே.

ஆனந்திற்கு வயதை மீறிய வாட்ட சாட்டமான உடம்பு. அரும்பு மீசை. மெலித்தான் தலை இழுப்பான். அடித் தொண்டையில் தான் கதைப்பான். யாரோடும் கோபிக்கமாட்டான். நண்பர்களோடு விட்டுக்கொடுக்கும் சுபாவமுடையவன். எந்த வேலையையும் ஏற்றத்தாழ்வு பார்க்காமல் செய்பவன். சமையல் செய்வதிலிருந்து, கிணறு கிண்டுவதுவரை அலுப்பில்லாமல் எதையும் செய்ய முன்நிற்பான்.

மெல்லிய நீலநிறத்தில் ஆடைகள் அணிவதில் அவனுக்கு விருப்பம் அதிகம்.

மயிலிட்டி மண் ஈந்த வீரமைந்தன் ஆனந்த் நீர்கொழும்பில் தன் ஆரம்பக் கல்வியைப் பெற்றான். பின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் உயர்கல்வி கற்றான். க. பொ. த. உயர்தரப்பிரிவில் விஞ்ஞானம் பயின்ற ஆனந்த் அரசியலைப் பின்னாளில் வாழ்க்கையாக வரித்துக் கொண்டான்.

பாடசாலைக் காலங்களில் ஆனந்த் சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்திருக்கிறான். பாடசாலை உதை பந்தாட்டக் கோஷ்டியில் சிறந்த கோல் கீப்பராகப் பிரபல்யம் பெற்றிருக்கிறான். சிறந்த கிரிக்கெட் வீரனுமாவான். காரத்தேயும் கற்றிருந்தான். சகலவிதமான வாகனங்களையும் அநாயாசமாக செலுத்தும் திறமைகொண்டவன்.

தனது குறுகிய ஆயுதப் பயிற்சிக் காலத்திலும் ஆயுதங்களின் நுட்பங்களை நிறையத் தெரிந்து வைத்திருந்தான். வெடிகுண்டுகள் தயாரிப்பதிலும் அவனுக்குப் போதுமான ரசாயன அறிவிருந்தது. துப்பாக்கிப் பயிற்சியின் போது மிகக் குறைந்த நேரத்தில் கூடிய இலக்குகளை (targets) அடிக்கக் கூடியவன். சரியாக இலக்குக்குக் குறிவைத்து அடித்துவிட்டான் என்றால் "ஹாய்..." என்று கைகளை உயர்த்திக் குலுங்கிச் சிரிக்கும் போது ஒரு பாடசாலைச் சிறுவனின் பெருமிதமே வெளிப்படும். (குறி தப்பாது சுடுகின்ற ஒரு கெரில்லா வீரனின் திறமையை ஜேம்ஸ்பாண்ட் சாகஸங்கள் என்று கொச்சையாக அர்த்தப்படுத்திக் கொண்டு நாம் குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை.) பலம் மிகுந்த அடக்குமுறை இராணுவத்திற்கு எதிராகக் குறைந்த அளவு ஆயுதங்களுடன் தொடுக்கப்படுகின்ற கெரில்லாத் தாக்குதலின்போது இத்தகைய திறமை வாய்ந்த கெரில்லா வீரர்கள் தனிமுக்கியம் வகிக்கின்றார்கள்.

• • •

வடக்கில் புலிகளை அடக்கிவிட்டோம் என்று ஜே. ஆர். ஜயவர்த்தனா கொக்கரித்தபோது ஒரு கெரில்லாப் போராட்டத்தினை அவ்வாறு அடக்கிவிட முடியாது என்பதை 1982 மே மாதம் நெல்லியடியில் அரசபடையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் தொடுத்த வெற்றிகரமான தாக்குதல் தெளிவாக எடுத்துக் காட்டியது.

ஸ்ரீலங்கா சிங்கள அரசபடைகளுக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய இந்தத் தாக்குதலையடுத்து தமிழீழ மக்கள் மத்தியில் ஏற்பட்ட நம்பிக்கை அலையின் நல்லதொரு வெளிப்பாடாக ஆனந்த் அமைந்தான்.

1982 ஜூன் மாத ஆரம்பத்தில் ஆனந்த் விடுதலைப்புலிகளின் இயக்கத்துடன் தொடர்பு கொண்டான். ஆயினும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்வதற்கு முன்னரேயே ஆனந்த் பிற விடுதலைக்குழுக்களைச் சேர்ந்தவர்களுடனும் தொடர்பு கொண்டு அவர்களது இயக்க நடவடிக்கைகளைக் கேட்டறிந்திருக்கிறான். பலர் வாய்ச்சொல் வீரர்களாக இருந்திருக்கிறார்கள். பலர் பொய்யான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் போலிகள் என்பதை உணர்ந்தே ஆனந்த் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தான். தங்களது அமைப்பின் அங்கத்தவர்களது இலட்சியத் தூய்மை குறித்தும் அர்ப்பணிப்பு குறித்தும் எங்கள் இயக்கம் பெருமிதம் கொள்கிறது.

வளமான குடும்பத்தைச் சேர்ந்த ஆனந்தின் உள்ளத்திலே கனன்றெழுந்த புரட்சித் தீதான் அவனுக்குத் தமிழீழத்தின் போராட்ட வரலாற்றிலே நிரந்தரமான இடத்தைத் தேடிக் கொடுத்தது.

இரு தமக்கையரையும் இரு தமையன்மாரையும் கொண்ட ஆனந்தின் இதயம் விடுதலையை நாடி நிற்கும் லட்சக்கணக்கான மக்களுக்காக விசாலமாகத் திறந்திருந்தது.

• • •

1983 ஜூலை 6ம் திகதி.

காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலைக்குள் சீலனின் தலைமையில் விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் சகிதம் நுழைகிறார்கள்.

கண் இமைக்கும் நேரத்தில் காவலாளிகளையும், டைம்கீப்பரையும் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறார்கள்.

சிங்கள வெறியன் சிரில் மாத்தியூவின் அமைச்சில் அடங்கும் இந்த சீமேந்துத் தொழிற்சாலையின் காவலாளிகள் அனைவரும் சிங்களவர்கள்.

நீர்கொழும்பில் நீண்ட காலம் வாழ்ந்ததால் சரளமாகச் சிங்களம் பேசும் ஆற்றல் கொண்ட ஆனந்த் நடுநடுங்கிக் கொண்டிருந்த காவலாளிகளை நோக்கிச் சிங்களத்தில் கதைத்தான்.

"நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிரிகள் இல்லை. சிங்கள அரசின் அடக்குமுறையைத் தான் நாங்கள் எதிர்க்கிறோம். நாங்கள் சிங்களவர்களுக்குத்தான் எதிரிகள் என்றால் உங்களை வெடிவைத்துத் தீர்க்க எங்களுக்கு அதிக நேரம் எடுக்காது."

சிங்களவர்களின் நாளாந்த அடக்குமுறைக்கும் அடாவடித்தனத்திற்கும் இலக்கான நீர்கொழும்பு போன்ற பகுதியில் வாழ்ந்த, வளர்ந்த ஆனந்திற்கு சிங்களவர்களை நோக்கிய ஒரு வெறுப்பு வளர்ந்திருந்தால் கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை பற்றி அவன் மிகத் தெளிவான கருத்துக்கள் கொண்டிருந்தான்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கெரில்லா வீரர்களில் சிங்கள நண்பர்களுடன் கூடிய பரிச்சயம் கொண்டவன் ஆனந்த். இது ஆனந்தின் சிறப்பம்சம். வெற்று மேடைப் பேச்சின் கூச்சல்களால் இவன் தமிழீழ அரசியலுக்கு ஈர்க்கப்படவில்லை. வேறு சிலரிடம் காணப்படுகிற குட்டநாட்டுக் குறுகிய மனோபாவத்தின் சாயல் கூட இவனிடம் இல்லை. நீர்கொழும்பில் சாதாரணச் சிங்கள மக்களுடன் ஆனந்த் நிறைய பழகியிருக்கிறான். அவன் சிங்களம் பேசும்போது மிக இயல்பாக—சிங்களவர்கள் பேசுவது போல இருக்கும் என்று அவனுடைய நெருங்கிய நண்பர்கள் கூறுகிறார்கள். தமிழ் மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமைக்காக களத்திலே குதித்த ஆனந்த் சிங்களத் துவேஷியாக இருந்ததில்லை.

• • •

காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில் இருந்து எக்ஸ்புளோடர்களையும் மற்ற உபகரணங்களையும் எடுத்துக்கொண்டு விடுதலைப்புலிகள் நள்ளிரவைத்தாண்டிய அந்தப் பொழுதில் கொக்குவிலுக்கருகில் டெலிக்கா வானில் வந்து கொண்டிருந்த போது வானின் பின் சில்லுக்குக் காற்றுப் போய் விட்டது.

இந்நேரம் காங்கேசன்துறைத் தொழிற்சாலையிலிருந்து பொலிஸ் நிலையங்களுக்கு இந்தச்சம்பவம் அறிவிக்கப்பட்டிருக்கும்.

எக்ஸ்புளோடர்களைத் தங்களது இருப்பிடத்திற்குக் கொண்டு போய் சேர்த்துவிட்டு, டெலிக்கா வானை அதன் சொந்தக்காரரிடம்கொண்டு போய்ச் சேர்த்தாக வேண்டும்.

ஜாக் அடித்து டயரைக் கழற்றி மாற்ற ஏதுவுமில்லை.

"இத்தனைபேர் இருக்கிறோம். ஆளுக்கு ஆள் வானைத் தூக்கிப் பிடியுங்கள். நான் டயரை மாற்றி விடுகிறேன்" என்று சொல்லி முன் வருபவன் ஆனந்த்.

ஆம், சில நிமிஷங்களில் புதிய டயரைப் பொருத்திக் கொண்டு வான் மின்னலாய் விரைந்து மறைகிறது.

• • •

1983 மே மாதம் ஸ்ரீலங்கா அரசு நடத்திய உள்ளூராட்சித் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும் பணியில் சீலனோடு துணை நின்று செயற்பட்டான் வீரன் ஆனந்த்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இந்தத் தேர்தலில் போட்டியிட முன்வந்த மூன்று வேட்பாளர்கள் மீது இயக்கம் இராணுவ ரீதியாக மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஆனந்திற்குப் பெரும் பங்குண்டு.

• • •

ஆனந்த் இறந்தபிறகு அவனை இன்னாரென அடையாளம் கண்டு விட்ட இராணுவ மிருகங்கள் ஆனந்தின் தந்தையைக் கண்டு சினந்தன.

"பிசாசு போலப் பிள்ளை பெற்றிருக்கிறாய்?" என்று சிங்களத்தில் அந்த மிருகங்கள் கத்தின.

"பிறக்கும் போது அவன் அப்படியில்லை" என்று அமைதியோடு பதில் சொல்கிறார் ஆனந்தின் தந்தை.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் காலில் குண்டு பாய்ந்து காலை இழுத்து இழுத்துக்கொண்டு திரிந்த சீலனை ஆனந்த் தான் தனது சைக்கிளில் வைத்துக்கொண்டு திரிவான்.


அந்த சீலனோடு சாவிலும் இணைந்து போனான் ஆனந்த்.

இயக்கத்திலே ஆனந்த் இணைந்த காலம் சொற்பமானாலும் இறுதிவரை உருக்குப் போன்ற மன உறுதியுடனும், உயிர் கொடுத்தும் இயக்கத்தின் இரகசியத்தைப் பேணும் திடத்துடனும் அவன் செயற்பட்டிருப்பது கெரில்லாப் போராளிகளுக்கு முன் மாதிரியாகவே அமைந்திருக்கிறது.

ஆனந்த்!
உனக்கு வயது பத்தொன்பது தான்.
ஆனால்—
நீயோ
புரட்சி கனலும் உள்ளங்களிலே
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்வாய்!




ஆனந்தின் கடிதத்திலிருந்து:




## அஞ்சலி

விடுதலைப்போரில் உயிர் நீத்த தியாகிகளுக்கு எமது வீரவணக்கம்.

1. ஜயம்பிள்ளை மணிவாசகன் (வாசன்) 23 நெடுந்தீவு.

2. வேதரத்தினம் மொரிஸ் ரெஜினல்ட் (சின்னக்கண்ணாடி என்ற அலெக்ஸ்) 19, கொய்யாத்தோட்டம்.


வாசன்


அலெக்ஸ்

**விடுதலைப்புலிகள்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான மாத இதழ்

வருடச் சந்தா ரூபா. 25-00

சந்தாப்பணத்தை A. RAJARAM என்ற பெயருக்கு காசோலை அல்லது மணியார்டர் மூலம் அனுப்பலாம்.

தொடர்பு முகவரி:
A. இராஜாராம்,
த. பெ. எண்: 928,
அடையாறு,
சென்னை-600 020.

www.eelamview.com